Registered No. M. 1229.

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்

மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி உ. | பிங்கள ஹ ஆனி 1917 ஹ ஜூன் மீ | பகுதி ரு.

பொருளடக்கம்.

புதல்வர்கடமை:—	பத்திராதிபர்	129
துருவசரித்திரம்:—	சி. நாராயணசாமி ஐயர் B.A. L.T.	135
விடுகதை வினாவுக்கு விடை:—	கமலாலயன்; ஆரூரான்.	137
கமலாவதி (தமிழ் நாடகம்):—	K. வேங்கடராமையர்	138
சாணக்ய சாஹஸம்: சந்திரகுப்த சரித்திரம் (இரண்டாம் பாகம்.)	வி. பாலம்மாள்	139
வள்ளுவர் நேரிசை:—	அரசஞ் சண்முகனார்	142
விநோதக்கூற்று:—	அடியார்க்கு நல்லான்	144
நன்மொழி:—பண்டித	எம். எம். நாராயணஸ்வாமி ஐயர்	145
அகச்சான்று அல்லது மனச்சாட்சி	R. S. கங்காஜடேச சர்மா	146
சிறுவர்க்காகும் கதைப் பூங்கொத்து.	வி. சூ. நடராஜன்.	149
கோபாலகிருஷ்ண கோக்லே:—	ம. கோபாலகிருஷ்ணையர்	150
சமாசாரக் கொத்து:—	பத்திராதிபர்	154
புத்தக மதிப்புரை:—	பத்திராதிபர்	158
விளம்பரங்கள்:—	மானேஜர்	

சொந்தக்காரர்:— ம. கோபாலகிருஷ்ணையர்

ம. கோபாலகிருஷ்ணையர், வி. பாலம்மாள் } பத்திராதிபர்.

திருமங்கலம் ஸ்ரீகிருஷ்ண விலாசம் அச்சியந்திரசாலை

வருஷ சந்தா ரூ. 2—0—0.] 1917. [தனிப்பிரதி அணா 3

வெளி நாடுகளுக்கு ரூ. 2—4—0.

குறிப்பு:—இதிலடங்கிய விஷயங்களைப் பத்திராதிபர் அனுமதி யின்றி எவரும் பிரசுரிக்கக் கூடாது.

பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் } ஸ்ரீ காசி { பட்டு பீதாம்பரக் கியாட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

உருத்திராக்ஷங்கள், ஜபமாலைகள் பரிசுத்தமானவை.

108 உள்ள மாலை 1-க்கு 6 அணா முதல் ரூபா 12வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6 முகக் கண்டிகள் 33 உள்ளது, கண்டி 1-க்கு ரூபா 1 முதல் 10 வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது, கண்டி 1-க்கு அணா 10முதல் ரூபா 10வரை. விலை அதிகப்படுவதுபோல், மணிகள் பெரிதாக இருக்கும். சம்மதமில்லாதவை, திரும்பப் பெற்றுக் கொள்ளப்படும்.

வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண் பட்டு வேஷ்டிகள் கோயமுத்தூர் சேலம் வேஷ்டிகள் மாதிரி: ஸன்ன கம்பி ருத்திராக்ஷக் கம்பி ஜரிகைக் கம்பி போட்டவை

4	முழம்	2	அகலம்	1-க்கு	ரூபா	4-8	முதல்	7	வரை.
6	,,	2½	,,	1-க்கு	,,	7	,,	9	,,
6	,,	3	,,	1-க்கு	,,	10	,,	12	,,
7	,,	2½	,,	1-க்கு	,,	8	,,	12	,,
7	,,	3	,,	1-க்கு	,,	10	,,	14	,,
8	,,	3	,,	1-க்கு	,,	12	,,	18	,,
9	,,	3	,,	1-க்கு	,,	14	,,	20	,,
10	,,	4	,,	1-க்கு	,,	15	,,	22	,,

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமாக சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்யப்பட்ட உறுதியும், நைஸானம், நேர்த்தியுமான கம்பளிப் போர்வைகள், 6 முழநீளம் 3 முழ அகலம். சிவப்பு முதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன உருப்படி 1-க்கு ரூபா 5—8—0. ஷை சிறிது 1-க்கு ரூபா 4—8—0. கேம் வர்ணப்போர்வை 1-க்கு ரூபா 6—8—0. தபால் செலவு பிரத்தியேகம்

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100-க்கு	...	...	3—0—0
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2—0—0
3-வது நெம்பர் 100-க்கு	...	...	2—0—0
4-வது நெம்பர் 100-க்கு	...	...	0—6—0

குழந்தைகள்.

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டி முதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும்மைசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2. பெரிய செட்டு 1-க்கு ரூபா. 4

உடனே எழுதுங்கள் விலாசம்:— மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, தாராநகர்தெரு, காசி.

Manager, Silk Petamber Co, Dharnagar St, Benares City.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி உ. } பிங்கள௵ ஆனிமீ 1917௵ ஜூன்மீ { பகுதி ரு.

புதல்வர் கடமை.

(103-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இதுகாறும் தன்னயந் தவிர்த்தலும் கைம்மாறு கருதாமையும் அன்பின் முதலாவது லக்ஷணம் என்பதைப்பற்றிப்பேசி, அவ்விஷயத்தைச் சில உதாரணங்களால் விளக்கினோம். இனி அன்பின் இரண்டாவது லக்ஷணமாகிய "அச்சம் அறியாமை"யைப் பற்றிச் சிறிது கூறுவம்.

அச்சம் காரணமாகப் பெற்றோரிடத் துண்டாகும் அன்பு,மனப்பூர்த்தியொடு கூடிய அன்பாகாது. அது அன்பின் போலியே. ஆவசியக உண்மை இன்மைகளை ஓர்ந்துகொள்ளப்படாமல்,வெறும் கோழைத் தனத்தாலேயே இவ் வன்பு அனுஷ்டிக்கப்படுவதால், அதற்கு மதிப்பே இல்லை. அச்சம் உறையும் அகத்தில் அன்பும் உறைதல் கூடாத காரியம். உள்ளபடியே மெய்யன்பு ஒருவரிடம் இருக்குமாயின், அது, எவ்வகைக் கஷ்ட நிஷ்டூரங்களையும் வென்று தனது ஆற்றலையே காட்டி நிற்கும். ஸ்ரீமத் விவேகாநந்த சுவாமிகள் கூறிய ஒரு சர்மானிய உதாரணத்தால் இதன் உண்மையை விளக்குவாம்.

"ஒருத்தி தெருவில் போய்க்கொண்டிருக்கிறாள். திடீரென்று நாய் ஒன்று குலைத்துக்கொண்டு அவளை நோக்கி ஓடி வருகிறது.

அவள் என்ன செய்கிருள்? பிராணனுக்கே ஆபத்து வந்தது போல நினைத்து, அஞ்சிப் பதைபதைத்து, திறந்திருக்கும் முதல் வீட்டைக் கண்ணுய் ஓடி, அதில் நுழைந்து ஒளிகிருள். இதே கோழைப்பெண், தன் அருமைக் குழந்தையோடு விளையாடிக் கொண்டிருக்கையில், திடீரென்று ஒரு புலி, குழந்தைமீது பாய்ந்து அதனைக் கௌவித் தூக்கிச் செல்லுகிறதென வைத்துக் கொள்ளுங்கள். அக்குழந்தையின் தாய் எங்கிருப்பள்? புலி வாய்க்குள் அன்ருே? ஏன்? குழந்தை மீதுள்ள மெய்யன்பால் அதனைக் காக்கும் பொருட்டே."

அதிகம் சொல்வானேன்? நீந்தப் பழகியறியாத் தாய்மார்கள் எத்துணைப் பேர்கள் தமது குழந்தைகள், அஜாக்கிரதையால் ஆற்றில் தவறி விழுந்த மறு விநாடியே, அவர்கள் மீதுள்ள மெய்யன்பால், ஆற்றிற் குதித்து அதிற் கிரையாகியும் இருக்கின்றனர்!. நிற்க.

தாயிடத்துள்ள மெய்யன்பு காரணமாகத் தன் உயிரையும் வெறுக்கத் துணிந்த ஓர் ஆங்கில மாலுமியின் அச்சமில் செய்கையைப் பின் வரும் உண்மைச் சரிதையால் உணருங்கள்:—

அசகாய சூரனும், அஞ்சா நெஞ்சும் ஆண்மையும் படைத்தவனும், தனது ஆற்றலால் ஐரோப்பா முழுமையுமே அலறஅடித்துப் "பயங்கரன்" என்று பெயர் வாங்கினவனுமாகிய "நெப்போலியன்" என்பவன், பிரான்ஸ் தேசச் சக்ர வர்த்தியாக இருந்தான். அவன் யுத்த வெறி கொண்டவன். ஆதலின் அவன் ஐரோப்பிய வல்லரசனைத்திற்கும் பகையாயினுன். இக் காரணம் பற்றி இங்கிலாந்திற்கும் அவன் விரோதி. இங்கிலாந்தின் மீது படையெடுக்கச் சகல முயற்சியும் அவன் செய்து கொண்டிருக்கும் போது, ஏழை இங்கிலீஷ் மாலுமி ஒருவன், பிரான்ஸியக் கப்பற் படையால் சிறை செய்யப் பட்டான். ஆயினும் அவனைக் காவல் செய்யாமல் எக் காரணத்தினுலோ, இஷ்டப்படி திரிய விட்டிருந்தனர். ஒரு உபத்திரவமுமின்றி அவன்இருந்தும், அங்கு அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. நாள்கள் பல ஆயின. அவனது எண்ணம் நிமிஷத்துக்கு நிமிஷம் இங்கிலாந்தின் மீது தான் இருந்தது. இங்கிலாந்தில் உள்ள 'டோவர்'க் கரையில் உள்ள வெண்பாறை, பிரான்ஸிலிருந்து பார்ப்பவர்க்கு நன்கு காணப்படும். பிரான்ஸிலிருந்து அப் பாறையை நோக்கிப்

பறந்து செல்லும் பக்ஷிகளைக் காணுந்தோறும், அவன், "ஐயோ! அன்னாய்! அன்பார்ந்த நின்னிடம்,

"இறையளவில் வந்தின்பம் எய்திடயான் மாட்டேனோ?
புறவனைய பறவைகளைப் போன்று சிற குறுவேனேல்!"

என்று ஏங்கிப் புலம்புவான். ஒருநாள் இராத் தூக்கமின்றி வருந்தி, விடிந்ததும் கடற் கரைக்குச் சென்றான். அவன் தனதூரையும் ஈன்றாளையும் நினைத்து வருந்தி நிற்குங் காலையில், வெற்றுப் பீப்பாய், ஒன்று, மிதந்து கரை நோக்கி வரக் கண்டான். ஒன்றோடொன்று புணைக்கப் பட்ட பலகைகள், நீரில் ஊறி, அவற்றில் உள்ள சந்து பொந்துகள் அடைபடுமாறு, யாராலோ போடப்பட்டது அப் பீப் பாய். இவ்வோட்டைப் பீப்பாயைக் கண்டவுடன், அவன் கடலிற் குதித்து அதனைக் கரைக்கு இழுத்து வந்தான். பிறகு அப் பீப்பா யை ஜன நடமாட்டம் இல்லாத ஓர் தனி யிடத்திற்குக் கொண்டு போய், கூரிய கற்கள் கொண்டு அதனைக் கொஞ்சம் கொஞ்சமாக இரண்டாகப் பிளந்து தள்ளி, சிரமப்பட்டு ஒரு சிறு படகாக்கினான். அக்கம் பக்கத்தில் வளர்ந்த மரக் கிளைகளையும் இலைகளையும் அப் படகில் உள்ள இடுக்கு முடுக்குகளில் திணித்து, அதனுள் நீர் ஏறாத படி அடைத்துக் கொடிகளால் ஆங்காங்கு அதனை, இறுக்கிச் சேர்த், துக் கட்டினான், பின்பு இறக்கினான் அதனைக் கடலில். "தெய்வம் விட் டவழி விடட்டும்" என்று துணிந்து அதில் ஏறி உட்கார்ந்து விட் டான் இவ்விழி படகு, அலைகள் சென்ற வாறெல்லாம் சென்றுகொண் டிருந்தது. இங்கும் அங்கும் அது நீர் வழிப்பட்டு ஒரு நிலையின் றித் தள்ளாடிக் கொண்டிருக்கையில், பிரான்சுக்காரர்களிற் சிலர், அவனைக் கண்டு இன்னானென்ன அறிந்து கொண்டு விட்டனர். உடனே அவர்கள் கைதிசெய்து, அவனது புன் படகுடன் அவனை நெப்போ லியன் முன்பு கொண்டு போய் நிறுத்தினர். அப்பொழுது நெப்போ லியன்,

* யுத்தமுறுங் காலத்தும் யுத்தமிலாக் காலத்தும்
ஒத்த மனஅமைதி உள்ளோனாய்—அத்தத்தைக்
கட்டிநிற்கும் தன்னதியற் கைப்படிநின் றன்னியனைச்
சுட்டி உரைத் தான்இந்தச் சொல்:

அவன் யாது சொன்னான் என்பதையும் பிறகு நடந்த விஷய

ங்களையும் வில்லியம் கௌப்பர் என்னும் கவிஞர், ஆங்கிலச் செய்யுட்களால் கூறியுள்ள வண்ணமே நாம் இப்பொழுது தமிழ்ச் செய்யுள்களில் கூறுகின்றோம்:

* கிளையாளும் கொம்பராளும் கேவலமா கச்செய்
துளஇதில்இக் கால்கடக்க உன்னும்—தெளிவில்லாய்!
சங்கையற நீஇனிமை சான்றதொரு ஆங்கிலேய
மங்கையின்மேல் வைத்தாய் மனம்.

(இங்ஙனம் நெப்போலியன் கூறலும்,)

'கன்னி ஒருத்தியையும் காதலித்தேன் அல்லேன் யான்.
பன்னெடுநாள் யாம்பிரிந்த பான்மையினால்—என்னுடைய.
அன்னையினைக் காண அதி ஆவல்இருந் திட்ட'தெனப்
பன்னினான் அவ்வாலி பன்.

நெப்போ லியன்கேட்டு "நீஅவ்வா றேகாண்பாய்
இப்போ(து) இருவீரும் என்மதிப்பை—ஒப்புறவே
பெற்றீர். இத் தீரமகற் பெற்றவள்ஓர் மேன்மைசால்
நற்றாயே" என்ன நவின்று,

திட்பத்தம் மாலுமிக்குச் செம்பொற் கா(சு)ஒன்றீந்து
கட்புக் கொடிபறக்கும் நாவாயில்—ஒட்பமுடன்
இட்டுச்சென் றேபண்டை இங்கிலாந் துக்கரையில்
விட்டுவரு கென்றே வினான்.

இங்கிலாந்து போய்ச் சேர்ந்த மாலுமிச் சிறுவனுக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவேது? நெப்போலியனை நாவாரத் துதித்தான். அவனது பெருங்கருணையை என்றும் அவன் மறக்கவில்லை. அப்பரம ஏழை, தன்நன்றியை நெப்போலியன்பாற் காட்டிய விதத்தைக் குறித்துப் பின் வருமாறு கௌப்பர் சொல்லுகிறார்.

*அருந்தப்போ தும்வெறுஞ்சோ றற்றும்தான் பன்னாள்
வருந்தவ(ன்)நம் மாலுமிஅவ் வண்ணம்—வருந்திடினும்
நெப்போ லியன்தனக்கு நேர்ந்தளித்த பொற்காசை
எப்போது மேமாற் றிலன்.

*இவ் வடையாளமிடப் பெற்றவை நமது அரும் பொருட்டிரட்டு (இரண்டாம்பாகம்) 39—ஆம் பக்கத்தில் உள்ள "நெப்போலியனும் ஆங்கில மாலுமியும்" என்பதனின்றும் எடுத்துச் சேர்க்கப் பட்டவை. முழு விஷயமும் அறிய விரும்புவோர் 47 கவிரத்னங்களடங்கிய அந்நூலிற் கண்டு கொள்க. விலை அணா 12.

நெப்போலியன், தாயிடத்தன்பு காட்டியவனிடத்து இவ்வளவு கருணையும் பெருந்தன்மையும் அன்பும் காட்டினன் என்றால், அவன், தனது தாயிடம் எவ்வளவு அன்புள்ளோனாக இருந்திருத்தல் வேண்டும் என்பதையும் சிறிது சிந்தியுங்கள்.

இதுகாறும், தாயிடத்துள்ள அபிமானத்தால் தனது உயிரையும் வெறுத்து, அவனைக்காண முற்பட்டு, நல்லவேளையாய் உயிர்தப்பி நன்கு மதிப்புற்ற வாலிபன் ஒருவனது வரலாறு கூறினம். இனி, தந்தை மீது கொண்ட அபிமானத்தால், தன் பிராணனையே தியாகஞ் செய்து விட்ட ஒரு உத்தமனது உண்மைச் சரிதையையும் உரைப்போம்:

ஐரோப்பாவில் உள்ள ரோமாபுரியை ஒரு காலத்தில் 'மூவேந்தர்' கூடி அரசாட்சி செய்து வந்தனர். இவர்கள் கொடுங்கோலர்கள். நல்லோர்க்கும் நகரவாசிகட்கும் சார்பாக நின்று நலம் புரிந்தவரை இவர்கள் பகைத்துத் தொலைத்துவிட லாயினர். 'அல்லாத மாந்தர்க்கு அறங்கூற்றம்' அன்றோ? இம் மகாத் துரோகிகள், "சிறந்த நாவலர்" எனச் சிறப்புப் பெயர் பெற்ற தல்லியஸ் ஸிஸரோ என்ற நீதிவாதியையும், அவரது சகோதரர் குவின்டஸ் ஸிஸரோ வையும் பிடித்துச் சிரச் சேதம் செய்துவிடுமாறு கட்டளை பிறப்பித்தனர். இஃதறிந்த நிமிஷமே அவ்விரு சகோதரரும் உயிர்தப்புமாறு ஓடலாயினர். ஒரு மறைவிட முற்றதும், தல்லியஸ் ஸிஸரோ, தம் சகோதரரை நோக்கி, "நான் கடற்கரைக்கும் போய்க் கப்பல் திட்டம் செய்துகொண் டிருக்கிறேன். நீ விரைந்தோடி, எவர்கண்ணினும் தட்டுப்படாமல் வீடு சென்று, நமக்குப் பயணத்துக்கும் வழிச் செலவுக்கும் வேண்டிய பொருள் கொண்டு வருக" என்று அனுப்பினர். குவின்டஸ், வீடுதிரும்பிய செய்தி, எவ்வாறோ கொடியர் மூவர்க்கும் தெரிந்து விட்டது. உடனே அவர்கள் பழி பாவத்திற் கஞ்சாப் பாவிகள் சிலரை அனுப்பிக் குவின்டஸைப் பிடித்துக் கொன்று திரும்புமாறு அனுப்பினர். இச்செய்தியைத் தம் மகன் மூலம் அறிந்த குவின்டஸ், தம் மகனைத் தவிர வேறு எவரும் எளிதிற் கண்டு பிடிக்க முடியாத ஒரு மறைவிடத்தில் ஒளிந்து கொண்டு விட்டார். அனுப்பப்பட்ட ஆட்கள் அவரைத் தேடித் தேடிப் பார்த்தும் அவர் அகப்படவில்லை. தங்கள் முயற்சி வீணானது கண்டு, அக் கொலைபாதகர்கள் அதி ஆக்ரகங் கொண்டு, குவின்டஸின் ஆரிளங் குமரனைப் பிடித்து, "இக்ஷணமே நீ உன் தந்தையின் இருப்பிடம் காட்டாயாகில் செத்தாய்" என்று உருவிய கத்தியை உயர்த்தி, உரத்துக் கூவினர். அவர்களது உருட்டுக்கும் மிரட்டுக்கும் பையன் சிறிதும் அஞ்சாது, "நான் பிதுர்த் துரோகியாவதினும் இறத்தலே மேல். கொல்லுங்கள்" என்று குனிந்து கொடுத்தான். அவனது தைரியத்தைக் கண்டு ஆச்சரியமுற்று, அவ் வெறுங்

தடியர், "நாங்கள் கொல்வதற்குத் தேடப்படுபவன் உன் தந்தையே உன்னைக் கொன்று எங்கட்கு ஏதுவும் ஆவதற்கில்லை. உன்னைக் கொன்று விட்டால் உன் தந்தையினது இருப்பிடம் எங்களால் அறிய முடியாது. ஆகையால் உன்னைப் பந்தத்தாற் சுட்டுப் பொசுக்கியேனும் உன்னிடமிருந்து உனது தந்தையைப் பற்றிய உண்மையறியாமல் அப்பாற் செல்லேம்" என்று கூறி, அவனைப் பல இடங்களிலும் பொசுக்கி, "சொல் இப்பொழுது. எங்கே உன் தந்தை?" என்றனர். பையன் இதற்கும் அசையவில்லை. உடனே அக்கிராதகர்கட்கு உக்கிரகம் அதிகரித்து விட்டது. கூரியகத்தி கொண்டு அவன் சதையைச் சிறிது சிறிதாகக் கழித்துக் "கூறு உண்மையை. கூறு உண்மையை" என்று நிர்ப்பந்தித்தனர். பையன் மரணாவஸ்தையிலும் தன் தந்தையைக் காட்டிக் கொடுக்கவில்லை.

கன்றாவின் பால்,செம்பான், கார் அகிலை
வாட்டமுறக் கனலில் இட்டு
நின்றாலும், சுவைஒளிநன் மணம்மிகும்போல்,
அவன்,"என்னை நீவிர் இன்னும்
கொன்றாலும், அழலெழத்தீக் கொளுத்தினும்,சிற்
றறிவாளாற் கொய்து கொய்து
தின்றாலும், மறந்தேனும் தீங்குதந்தைக்(கு)
இழையாதான் சிந்தை" என்றான்.

தாங்கொணாக் கொடுமையெலாம் சகித்துக் கொண்டு, மகன், தம் பொருட்டு நின்றதையறிந்த குவின்டஸ் மனம் பட்ட பாட்டை யாமோ கூற வல்லேம்? "அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்" அவர் தம் ஆருயிரை வெறுத்து அச் சண்டாளர்களை நோக்கி, "பாவிகாள்! நிர்த்தோஷியாகிய என் சற்புத்திரனை ஏன் வதைக்கின்றீர்கள்? என்னைக் கொல்லுங்கள். விட்டுவிடுங்கள் அவனை" என்று அழுது கதறினர். உடனே அவரது அருங்குமரன் "என்னைக் கொல்லுங்கள். எந்தையைக் கொல்லாதீர். அவர் சாவதைக் காணச் சகியேன்" என்று மன்றாடினன். அக்கொலைபாதகர் "நீங்கள் ஒருவர் சாவதை ஒருவர் காண வேண்டுவதேயில்லை" என்று சிறிதும் இரக்கமின்றித் தகப்பனையும் மகனையும் ஏக காலத்தில் வெட்டி வீழ்த்தினர். தந்தையிடத்துப் பையனுக்கிருந்த அன்பையும், தந்தைக்கிருந்த புத்திரவாஞ்சையையும் சிந்தித் துணருங்கள்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

துருவச் சரித்திரம்.

(120 ஆம் பக்கத் தொடர்ச்சி.)

பிறகு ராஜகுமாரனை நோக்கி, அவர்கள், "எங்களாலே ஆகவேண்டிய சகாயமென்ன?" என்று வினவ, துருவன் "ஹே! மகரிஷிகளே! நான் தனத்தையாவது இகலோகத்துக்கு வேண்டிய இன்பத்தையாவது ராஜ்யத்தையாவது அபேட்சித்து வந்தேனல்லேன். பரம தயாளுவும் பீதாம்பரதாரியும் வைகுண்ட வாசியுமாகிய ஸ்ரீதரனது பாத பத்மங்களை அநவரதமும் தியானித்துப் பிரமாதி தேவர்களுக்கும் எட்டவொண்ணாத மோக்ஷ சாம்ராஜ்ய பதவி எனக்குச் சித்திக்கும்படி வரந்தருளவேண்டும்" என்று பிரார்த்தித்து வணங்கினன். அவனைப்பார்த்து, மரீசி முதலிய முனீந்திரர்கள் பேரானந்தம் அடைந்து, "ஆதியந்தம் கடந்த சச்சிதானந்த சொருபியாகிய கோவிந்தனை எவன் ஆராதனை செய்கிறானோ, அவனே, நீ சொல்லுகிற பதவியை அடைவான். இந்திரன் எந்த விஷ்ணுவை யாராதித்து இந்திரப் பதவியை யடைந்தானோ, அந்தச் சர்வோத்தமனாகிய ஜகத்பதியை ஆராதித்தால் நீ நினைக்குங் கதி யடையலாம்" என்றனர்.

இங்ஙனம் சொன்ன முனிவர்களைப் பார்த்து, துருவன் "ஹே! தபோ நிதிகளே! உபதேசமார்க்கம் அனேகமாக யிருந்த போதிலும், தற்காலத்தில் எதை அவசியமாக ஜபிக்கவேண்டுமோ அந்த மந்திரத்தை யருளிச் செய்ய வேண்டும்" என, இருடிகள், "ஓ துருவ ராஜனே! மனிதர்கள் எவ்வாறு தியானித்தால் சாக்ஷாத் மகாவிஷ்ணு பிரத்தியக்ஷமாவரோ, அந்நெறியைச் சொல்லுகின்றோம். கேட்பாயாக. உனது மனத்தை வேறு விஷயத்தில் வைக்காமல், ஸர்வேசுரனாகிய ஜகதீசனைத் தியானம்பண்ண வேண்டும்" என்று சொல்லி, 'ஓம் நமோ பகவதே வாஸுதேவாய' என்ற, துவாதசாட்சர மந்திரத்தை யுபதேசித்து, "இந்த மந்திரத்தை ஜபித்தால் பாற்கடலிற் பள்ளிகொண்ட பரந்தாமன் பிரத்தியக்ஷமாவார். இம்மந்திரத்தை உன் பிதாமகராகிய சுவாயம்புவ மனு, தியானித்துத் தனக்கு அபீஷ்டமாயுள்ள வரங்களைப் பெற்றார். அப்படியே நீயும் அடைவாயாக" என்று ஆசீர்வதித்தனர்.

இவ்வண்ணம் மந்திரோபதேசம் பெற்றுக்கொண்ட துருவன், முனிவர்களை வணங்கி, அவர்களுடைய அனுக்கிரகம் பெற்றுத் தனக்கு அப்பொழுதே சர்வமும் சித்தியாகிவிட்டதென எண்ணிச் சந்துஷ்டியுடையவனாய், யமுனா நதிக்கரையிலுள்ள மதுவனத்தை யடைந்தான். இவ்வனம் பூர்வத்தில் மதுவென்ற அரக்கன் வசித்த இடமாகையால் இதற்கு இப்பெயர் வந்தது. இவ்விடத்திற்றான் ஸ்ரீ தசரத புத்திரனாகிய சத்துருக்னன் மதுவின் குமாரனாகிய லவணாசுரனைக் கொன்று மதுராபுரி யென்ற நகரத்தை ஸ்தாபித்தது. ஓர் காலத்தில் கஜேந்திராழ்வார் முதலை வாயிலகப்பட்டு, திரும்பிக் கரையை யடைய முடியாமல் 'ஆதிமூலமே' யென்று ஓலமிட்டலறச் சக்கரத்தால் முதலையின் தலையை யறுத்துக் கஜேந்திரனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்தருளிய ஹரிமேதஸ் என்கிற ரிஷி தபசு செய்த இடமும் இதுதான். இந்த மதுவனத்தில் தான் மரீசி முதலிய ரிஷிகள் தபசு செய்து தமது அபீஷ்டத்தை யடைந்தார்கள்.

இப் பெருமை தங்கிய வனத்தையடைந்து, ஸகல பாபக்ஷயகரமான இப் புண்ணிய க்ஷேத்திரத்தில், ஒற்றைக் காலால் நின்றுகொண்டு, எங்கும் நிறைந்த பரம்பொருளான மகாவிஷ்ணுவை ஏகாக்கிர சித்தத்துடன் மரீசி முதலிய ரிஷிகள் உபதேசித்த கிரமப்படி தியானஞ்செய்தான்.

பரமயோகியான துருவனுடைய இருதயகமலத்தில் எம்பெருமானாகிய ஸ்ரீமந் நாராயணன் வந்து ஆவிர்ப்பவித்துவிட்டபடியால் பூமிதேவி இவனுடைய பாரத்தைத் தாங்க அசக்தமுடையவளானாள். இடது காலையூன்றி நிற்கும்பொழுது, பூமியின் வலது பக்கமும், வலதுகாலை யூன்றித் தபசு செய்யும்போது, பூமியின் இடது பக்கமும் உயர்ந்து, உலகமெல்லாம் அல்லோல கல்லோலப் பட்டிருந்தது. அனேக பர்வதங்களோடு கூடிய பூமியானது, கம்பித்து நதிகளும் நதங்களுந் தலைகீழாக வோடத் தொடங்கின. மகா நதிகளும் ஸப்த ஸாகரங்களும் கலங்கிப் போயின. தேவர்களெல்லாம் பயத்தை யடைந்து, தேவேந்திரனுடனே ஆலோசனை செய்து, 'துருவன் இந்திரப் பதவிக்காகத்தான் இந்த உக்கிர தபசைச் செய்கிறான்'' என்றெண்ணி, துருவனது தியானத்தைப் பேதிப்பதற்காக மாயா சக்தியால் பலவித பூத பைசாச ரூபங்களை யெடுத்து வெருவித இடைச்

கண் செய்யத் தொடங்கினார்கள். துருவனோ, கண்களைத் திறந்து பாராமல், பரமாத்மாவினிடத்தில் வைத்த சித்தத்தோடு கூடியவனாயிருந்தான்.

துருவன் தாயாகிய சுநீதியின் சொரூபத்தை ஓர் மாயை தரித்துத் துருவனை நோக்கி "அடா அருமைக் குழந்தாய்! ஹே பாலகா! நீ ஒரு தாய்க்கு ஒரே புத்திரனன்றோ? அனேகவித விரதங்களும் தபசுகளுஞ் செய்தல்லவோ உன்னைப் பெற்றேன்! எனது சககளத்தியாகிய சுருசியின் வார்த்தையைச் சகிக்காமலன்றோ உடனே தபசுக்குப் புறப்பட்டுவிட்டாய். என் கண்மணியே! இந்தக் கொடுந் தபசை விட்டுவிடு. ஐந்தே வயதுப் பாலனாகிய நீ யெங்கே? கொடுந்தவமெங்கே? உனக்கு இப்பொழுது விளையாடும் பிராயமல்லவோ? பிறகு வேதசாஸ்திரங்களை அத்தியயனம் செய்யுங் காலம் அதன்பிறகு போகானுபவங்களை நுகர்ந்தபின் னன்றோ தவம்புரிதல் வேண்டும்? விளையாடும் பருவத்தில் ஆத்துமக் கிலேசப தபசு செய்வது யுக்தமன்று. ஆகையால் தபசு வேண்டாம். நீ [illegible]லாவிடில் இனி ஒரு கணப்பொழுதேனும் என்னுயிர் த[illegible] "தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை" என்பது கேட்டிலையே [illegible]னைக் கீர்ப்பாற்றுங் கடமையினும் வேறு பெருந்தவமுண் [illegible]தாசரதியாகிய ஸ்ரீராமபிரான் தன் இளைய தாயாகிய [illegible]யின் வாக்கியத்தைப் பரிபாலனம் பண்ணும் பொருட்டு இராஜ்[illegible]த்தை விட்டுக் காட்டிற்குச் சென்று பதினன்கு வருஷகாலம் [illegible] செய்தானன்றோ! அடா செல்வமே! நீ இந்தத் தபசை விடாவிடின் நான் என்பிராணனை உன் சமீபத்திலேயே விட்டுவிடுகிறேன்" என்று சொல்லிற்று. (இன்னும் வரும்)

சி. நாராயணசாமி ஐயர். B. A. L. T.

விடுகதை வினாவுக்கு விடை.

ஏப்ரல் விடுகதைக்கு விடை.

I. மங்கை யொருத்தி மருங்கிருந்த சேய்அந்த
அங்கனைக்குத் தம்பியே ஆகுவனே—எங்கும்
சமானு திகமில் விவேகோ தயமே!
குமாரசா மிக்கிதனைக் கூறு. —கமலாலயன்.

2

மேமீ விடுகதைக்கு விடை.

II உளத்திருள் கடிவிவே கோதயம்! பரம்
அளித்தருள் புரியும் எம் அரங்கநாதனே
இளிச்சிறை யிறையனார் கேட்ட தன்பொருள்.
களிப்புடன் அவர்க்கிது கழறு வாயரோ. —ஆரூரன்.

கமலாவதி.

அங்கம்—4

காட்சி—4.

இடம்.—மாளவ நாட்டில் ஒரு வீதி. காலம்—காலை

(ஸ்ரீதரனும் ஜயகேசரியும் பிரவேசிக்கின்றனர்)

ஸ்ரீ. ஜயகேசரி! போனவிஷயம் யாதாயிற்று?

அரசே! எல்லாம் நமக்கு அனுகூலந்தான். ஆனால்—

ஆனால் என்ன?

அப்பாதகனைக் கொல்லாமல் கமலாவதியை மீட்பது அசாத்தியம்.

அவன் யார்? கொல்லாமல் முடியாதா? சமாதானமாகவே கமலாவதியை மீட்கப் பார்ப்போமே. முடியாமற் போனால் இருக்கவே இருக்கிறது.

அரசே! அன்று எனக்கு அளித்த வாக்கை மறந்தீரோ? அவனைக் கொன்றே தீரவேண்டும். அவனே உங்கள் தந்தை உயிர்க்கு உலை வைக்க முயன்ற துரோகி. அவன் உயிருடன் உள்ளளவும் நமக்கு ஆபத்துத்தான்.

ம்! அவன் பெயர் கூட நான் அறியலாகாதா?

அவன் இன்னானென இப்பொழுது நான் அறிவியாமைக்கு மன்னிக்க வேண்டும்.

ஹா! இதென்ன கஷ்டம்.!

ஜய. நான் சொல்வதை மட்டும் கேட்டால், இனி தங்களுக்கு சுகம்தான். கஷ்டமே இல்லை.

ஸ்ரீ. உம்—அப்படியா?

ஜய. இனி நாம் தாமதிப்பது சரியன்று. தாமதித்தால் காரியம் கெட்டே போம். சீக்கிரம் செல்வோம்.

ஸ்ரீ. சரி.

ஜய. அப்படியானால் புறப்படுவோம் உடனே.

[இருவரும் செல்கின்றனர்]

காட்சி முடிகிறது.

K. வேங்கடராமையர்.

சாணக்கிய ஸாஹஸம் என்னும் சந்திரகுப்த சரித்திரம்.

ஏழாவது அத்தியாயம்.

அதிகாரிகளும் அரசர்களும் சந்திரகுப்தனைத் தரிசித்தல்.

வத்ஸலாயனன் சமஸ்த வைபவத்துடனும் சென்று, தூரத்திலிருந்தே சந்திரகுப்தனைக் கண்டு நமஸ்கரித்து, சமீபம் வந்து, காணிக்கைகளை ஒப்புவித்துத் திறவுகோல்களையும ராஜமுத்திரையையும் முன் வைத்து, மறுபடியும் கும்பிட்டு நின்றான். அவனுடன் ஆகமது எல்லா முக்கிய அதிகாரிகளும் கைகூப்பி வந்தனம் செய்துவையும் ராகள். ஆவஸரப்

சந்திரகுப்தன் அவர்கள் யாவரையும் கிரமப்படி யோக்யம்.:இப் மம் விசாரித்து, அவரவர்கட்குரிய ஆசனங்களில் அமரச்செய்விவித்து, பின்பு, வத்ஸலாயனன் எழுந்து நின்று, கைகட்டிக் கொண்டு நக் "மஹா பிரபுவே! அஸ்தமன பர்வதத்தில் அஸ்தமித்த சூரியனுக்கும் பின்னகச் செய்து, உதிக்கும் சுக்ல பக்ஷத்திய பால சந்திரனக்குத் தரிசனத்தை அபேக்ஷித்துக் கொண்டிருக்கும் குமுத புஷ்பக் கூட டம் போல், 'நாளுக்குநாள் விருத்தியுடையும் ஸம்பத்துடன் கூடிண்டு யானை மீதேறி ராஜவீதியில் பவனி வரும தங்களைத் தரிசித்து, ரய என்று தமது கண்கள் சபலமாகப் போகிறது' என்று ஸகலப் பிரஜைகளும் மிக ஆவலுடனும் ஆனந்தத்துடனும் எதிர் பார்க்கிறார்கள். அவ்விதமே நந்த ராஜ்ய லக்ஷ்மியும், வரமாலையைக் கையிற் பிடித்து, ராஜகுப்தனகிய தங்களை எதிர் பார்த்தவளாகக் காத்திருக்கின்றாள். பட்டணத்திற்கு விஜயம் செய்து எல்லோரையும் ஆனந்தப்படுத்த வேண்டும்" என்று விக்ஞாபித்துக் கொண்டிருந்தான்.

அப்போது பத்ரபடாதி சேனபதிகளின் தம்பி தமையன்மார்கள் வந்து, தூரத்திலிருந்தே கைகூப்பி, நமஸ்கரித்துத் தம் காணிக்கைகளை முன் வைத்து உத்தரவுப் பிரகாரம் உசிதமான விடங்களில் உட்கார்ந்தார்கள். சந்திரகுப்தன் அவர்களை நோக்கிப்

பதாதி ஸேனாநாயகர்கள் எங்கிருக்கிறார்கள்?" என்று வினவினான். வினவலும், அவர்கள், அரசே! நமது ஸேநா நாயகர்கள் "சிதறிக் கிடக்கும் சைன்யங்களைத் திரட்டிக் கொண்டு சீக்கிரமாகவே மஹா ராஜாவைத் தரிசிக்க வருகிறோம். நீங்கள் முந்திச் சென்று பிரபுவைக் கண்டு அவர் உத்தரவிட்டபடி நடந்து கொள்ளவேண்டியது" என்று எங்களையனுப்பினார்கள்" என்று வணக்கமாய்த் தெரிவித்தார்கள்.

'சரி' என்று அவர்களெல்லோர்க்கும் தாம்பூலம் அளிக்கும்படி சந்திரகுப்தன் உத்திரவிட்டு, "முன் போலவே அவரவர்களின் அதிகாரத்தில் எச்சரிப்புடனும் ஸாவதானத்துடனுமிருக்க வேண்டியது" என்று ஆக்ஞாபித்துப் பொக்கிஷாதிகாரியான ருக்மனைப் பார்த்து, "ஐயா! பூஜ்யரான பிதாமகர்க்கு இப்பொழுது எந்த வஸ்துவிற்கில் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவும் நம் கைவசமில்லாவிட்டாலும், உடனே எங்கிருந்தேனும் வரவழைத்தாவது தடையின்றி தாமதமின்றியும் அனுப்பு. நந்த பத்தினிகள் தங்களிடமிருக்கும் ஆபரணங்களைத் தங்கள் தங்கள் இஷ்டம் போல செலவு செய்து கொள்ளட்டும்" என்று கூறி, வந்தோர் யாவருக்கும் அனுமதி கொடுத்து அனுப்பினான்.

பிறகு, சிற்றரசர்களெல்லோரும் வந்து, சந்திரகுப்தனைக் கண்டு வந்தனம் செய்தனர். சந்திரகுப்தன் எழுந்து நாலெட்டடி நடந்து வந்து அவர்களை ஆலிங்கனம் செய்து க்ஷேமம் விசாரித்து, அவர்களைத் தக்க ஆசனங்களில் இருத்தித் தானும் உட்கார்ந்து, அவர்கட்கு முகமன்கூற, அவர்கள், "அநேக நக்ஷத்திரங்களாற் சோபிக்கும் ஆகாய வீதியானது, உதித்து வரும் சந்திரனால் மிகப்பிரகாசிப்பது போல் விளங்கும் ராஜாதிராஜரான சந்திரகுப்த மகாராஜாவே! உங்கள் ஆளுகைக்குட்பட்ட சகல ராஜ்யங்களும் சத்துரு பயமேயின்றி, பெரு மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் விளங்கிக்கொண்டிருக்கின்றன. ஒரு குறைவும் எங்கட்கில்லை" என்றனர்.

அநந்தரம், சந்திரகுப்தன் அவர்களனைவரையும் கந்த மாலைகளாலும் கற்பூர தாம்பூலங்களாலும் மரியாதை செய்து உபசரித்து அவர்களுக்குச் செலவு கொடுத்து அனுப்பினான்.

எட்டாவது அத்தியாயம்.

உடன் கட்டையேற உத்தரவு வேண்டல்

பாகுராயணன், நந்த பத்தினிகளிடம் சொல்லி வந்தபடியே புத்தகளத்தைச் சோதித்தான். நந்தர்களின் உடல்கள் ஜபசாலையிலுள்ள அக்கினி குண்டத்தில் இடப்பட்டு சாம்பலானதையும் தலைகள் மட்டும் சேகரனுடைய உத்தரவுப்படி தைலக் கொப்பறையில் வைக்கப் பட்டிருப்பதையும் அறிந்தான். அறிந்ததும், அவன், ஸித்தார்த்தகனை வரவழைத்து, "ஐயா! நந்த பத்தினிகள் ஸஹகமனம் செய்யச் சித்தமாயிருக்கின்றனர். அவர்கள் தங்களிடமிருக்கும் திரவியம் ஆபரண மிவைகளில் நாலில் ஒரு பங்கு ராஜபொக்கிஷத்திற்கும், மீந்த முக்காற் பங்கைத் தங்களுக்குப் பரலோக வழிக்கும் உபயோகிக்க வேண்டுமெனத் தீர்மானித்திருக்கின்றனர். தமது எண்ணப்படி நடத்தித் தந்து சந்திரகுப்தன் அதிக கீர்த்தியையும் க்ஷேமத்தையும் அடையட்டும் என்று சொல்லி அவர்கள் அவஸரப் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நீ ஒரு காரியம் செய்யவேண்டும்.: இப்பொழுதே இவ் விஷயத்தைச் சந்திரகுப்தனுக்குத் தெரிவித்து, அவனை உடன்படச்செய்து, அவனது உத்தரவு பெற்றுக்கொண்டு நந்தர்களின் தலைகளை நகருக்கு வெளியில் கங்காநதிக் கரையிலிருக்கும் உத்தியானவனத்தில் கொண்டுவந்து வைத்து, உடனே எனக்குத் தெரியப்படுத்த வேண்டும்" என்றான்.

ஸித்தார்த்தகன் அவ்விதமே செய்வதாக ஒப்புக்கொண்டு விடுதியிலிருக்கும் சந்திரகுப்தனைக் கண்டு கும்பிட்டுப் பாகுராயணன் சொன்ன சமாசாரங்களைத் தெரிவித்தான். அது கேட்டுச் சந்திரகுப்தன், "நந்தர்கள் எங்கள் பிதாவுக்கும், சகோதரர்களுக்கும் செய்த துரோகத்தைத் தெய்வம் சகிக்கமாட்டாது, அவர்களுக்கிவ்வித ஆபத்தை விளைவித்து விட்டது. மிஞ்சிப் போன காரியத்தைக் குறித்துக் கொள்ளும் கவலையாலும் விஸனத்தாலும் பயனில்லை. நந்த பத்தினிகள் எனக்குத் தாய்மார்களே யன்றி வேறில்லை. சுமங்கலித் தன்மை ஒன்று இல்லாதது பெருங்குறைவே யாயினும் என்ன செய்கிறது? அவர்களைக் கௌரவமாகவே நடத்துகிறேன். என் தாய்மார்களைவிட அதிக அன்புடன் நடத்தக் கருதிருக்

கிறேன். அவர்களும் என்னை அபிமான புத்திரனாக பாவித்து ஆசீர்வதித்துக் கொண்டிருக்கட்டும். விருத்த பருவமடைந்திருக்கும் அரச தம்பதிகளைச் அடிக்கடி தேற்றிக் கொண்டும், என்னை யாதரித்துக் கொண்டும், நான் செய்யும் பணிவிடைகளால் சகல துக்கத்தையும் அவர்கள் மறந்து என்னால் பூஜிக்கப்பட்டுக் கொண்டும் இருக்கட்டும். நான் இச்சமயம் அங்கு நேரில் வந்து பணிந்து கேட்டுக் கொள்ள வேண்டியவனாக இருந்தும், என்னைக் கண்டதும் அவர்களுக்கு 'துரியோதனாதிகளைக் கொன்ற பீமஸேனனைக் கண்டதும், காந்தாரிக்கு இரட்டிப்பு துக்கமுண்டானது போல' விஸனம அதிகரிக்கு மாகையால் நான் நேரில் காணும் சமயமிதல்ல. இவைகளை எல்லாம் நான் பெரிய அரசரிடமும் தாய்மார்களிடமும், நமஸ்கரித்து பக்தியுடனும், வணக்கத்துடனும் விக்ஞாபித்துக்கொண்டதாக பாகுராயணனைக் கொண்டு தெரியப்படுத்த வேண்டியது. பிதா மகரின் ஸமாதான வார்த்தையையும், என்னுடைய பிரார்த்தனையையும் மனதிற்குள் வாங்காமல் ஸஹகமனம் செய்யவேண்டுமென்று அவர்கள் பிடிவாதமாகத் தீர்மானித்துவிடும் பக்ஷத்தில், ஒருவராலும் தடை செய்யமுடியாது. அவர்கள் மனம்போல் 'ஆகட்டும்' என்று சொல்வதைக் காட்டிலும் அதிகம் என்னால் செய்ய முடியுமோ? எனது யத்தனம் பலிக்குமோ? அங்கு ஆகவேண்டிய விஷயங்களுக் கெல்லாம் பொக்கிஷதாரியான் ருக்மனுக்கு முன்பே உத்திரவிடப் பட்டிருக்கிறது. எல்லாவற்றையும் பாகுராயணனே முன் நின்று நடத்தட்டும்" என்று சொல்லலும், ஸித்தார்த்தகன் அங்கிருந்து வெளிப்பட்டு, தைலக்கொப்பறைகளிலிருக்கும் நந்தர்களின் தலையை எடுத்து வரச் செய்து, உத்தியான வனத்தில் இறக்கிவிட்டு, பிறகு பாகுராயணனைக் கண்டு சந்திரகுப்தன் சொல்லி யனுப்பியவைகளை எல்லாம் விவரமாகத் தெரிவித்தான்.

வி. பாலம்மாள்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(106-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஆவின்பால் ஈந்துவித்தி யாரணியர்க் காத்தோன்பின்
மாவேந்த னுய்வாழ்ந்தான் வள்ளுவரே!—நாவால்
இனைத் துணைத்(து) என்பதொன் றில்லை; விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். (எ)

(அ-ம் முதலியன):—**வித்யாரணியரைக் காத்தோன்** – ‘புக்கணன்’ என்ற இடையன்; இணைத் துணைத்து- இவ்வளவு அளவுடையது, விருந்தின் துணைத்துணை—விருந்தினரின் பெருமைக்குத் தக்கபடி, வேள்வி—பஞ்ச யக்ஞங்களில் ஒன்றாகிய மானிட யக்ஞத்தினது.

வித்யாரணியரைக் காத்தோன் வேந்தன் ஆனது:—மாயணன் என்பவரது குமாரரும், மாதவர்சாரியார் என்ற பெயருடையவரும், ஸம்ஸ்கிருதத்தில் உள்ள சகல கலைகளிலும்வல்லவருமான இவர், எளியகுடும்பத்தில் சுமார் 550 வருடங்கட்குமுன் பிறந்தவர். தம் வறுமைப் பிணி நீங்கி இன்புறுமாறு, இவர் இளமையிற் கற்றும் பயனுறாது, திருமகளையும் கலைமகளையும் குறித்துத் தவஞ்செய்யக் காடு சென்றனர். அங்கு, அவர் பட்ட கஷ்டம் கணக்கில் அடங்காது. அவர் தாம் அநுபவிக்கும் கஷ்டங்களை, ஒரு நாள், அக்காட்டில் அரசனது மாடுகளை மேய்த்துத் திரிந்த புக்கணன் என்பனிடம் கூறினர். அவன் மனமிரங்கி, அரசனுக்குச் சேர வேண்டிய பால் போக, அவமாக ஒழுகிப் போகும் பாலிற் சிறிது அவர்க்குக் கொடுத்து வந்தான். வித்யாரணிர் உணவு பற்றிய கவலையேயின்றித் தவமியற்றலானார். ஆயினும் நெடுங்காலமான பின், திருமகளும் கலைமகளும் புக்கணன் கனவிற் றோன்றி ‘மாதவர் கருத்து இப்பிறப்பில் நிறைவுறாது’ என்று கூறிச் சென்றனர். இச்செய்தியைப் புக்கணன் வித்யாரணியர்க்கு அறிவித்தான். ஆயினும் அவர் விடாமுயற்சி யுடையோராய் மேன் மேலும் தவம் செய்தும் காரியசித்தி பெறாததால் சினந்து, தமது உபவீதத்தை அறுத்தெறிந்து துறவியாயினர். ‘சந்யாஸம் மறுபிறப்பு’ ஆகவே கலைமகளும் திருமகளும் மாதவர் முன் தோன்றி, “நீ வேண்டும் வரம் யாது?” என்ன, அவர் சந்யாசியாகிய எனக்குத் திருமகள் அருள் தேவை இல்லை. கலைமகள் அருள் ஒன்றே வேண்டும். ஆயினும் என்னை அன்புடன் ஆதரித்த புக்கணனுக்கு ‘திருமகள் அருள் வேண்டும்’ எனக் கூறிப்பணிய, அவர்களும் ‘அங்ஙனமே ஆகுக’ என்று அருளி அந்தர்த்தானமாயினர். சின்னாட்கெல்லாம், ஹஸ்தினாபுர அரசன் இறந்தான். அந்நகர மாந்தர் பட்டத்து யானையை அலங்கரித்து அதன் கையிற் குடந்தந்து ‘மன்னனொருவனைக் கண்டு கொணர்க’ என விடுத்தனர். அது காட்டை யணுகி, தூங்கிக் கொண்டிருந்த புக்கணன் தலைமீது நீரை அபிஷேகம் செய்து, பூமாலை சூட்டித் தூக்கிச் சென்றது. புக்கணன் அரசனாயினன்.” என்பதே.

[புக்கணன் அரசனானபிறகு மாதவாசாரியார் அவனது மெய்யன்பைச் சோதித்தறியக் கருதி அவனது அரண்மனை நோக்கிச் சென்றனர். இதற்குள் அவரது வருகையை ஒற்றர் மூலமறிந்த அரசன், பயபக்தி விசுவாசத்துடன் அவரை எதிர் கொண்டு சென்று உபசரித்தான். அதுமுதல் அவரைத் தன்னிடமே வைத்துக் கொண்டு அவரது யோசனைக் கிணங்கவே புக்கணன் சகல காரியமும் நடத்தி வந்தான். இப்புக்கணனுடைய விருப்பிற்கிணங்கியே வித்யாரண்யர், பல நூல்கட்கு வியாக்கியானம் எழுதியது என்க. வேதம், உபநிஷதம், சூதசங்கிதை முதலியவை இவரது வியாக்கியானம் பெற்றவைகளே. இவர் செய்த சங்கர விலாசம் 40,000 செய்யுளுடையது. **இம் மாதவாசாரியரது தீக்ஷாநாமம் தான் வித்யாரணியர் என்பது.**

பன்னகர்கா யேயுண்பான் ஓம்பிப் பறவைகொணர்
மன்னமிழ்தம் முன்னிழந்தார் வள்ளுவமே!—என்னோ?
பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வித் தலைப்படா தார். (அ)

(அம்—முதலியன) பன்னகர்—பாம்புகள்; உண்பான்—உண்ணும் பொருட்டு,பறவை—கருடன்; கொணர்—கொண்டுவந்த; மன் அமிழ்தம்—பெருமை தங்கிய தேவாமிர்தம்; பரிந்து—விரும்பி; ஓம்பி—பாதுகாத்து;

பறவை கொணர்ந்த அமுதத்தைப் பன்னகர் இழந்தது:—நாகங்களைப் பெற்ற கத்துருவும், அருணன் கருடன் முதலியோரைப் பெற்ற விநதையும்,திருப்பாற் கடற் கரையிலே உச்சைச் சிரவத்தைக் கண்டு விநோதார்த்தமாக சம்பாஷித்ததும், அச் சம்பாஷணையின் பயனாக விநதை கத்துருவுக்கு அடிமையானதும் வள்ளுவர் நேரிசை 8—ஆவது அதிகாரம் 10—ஆவது செய்யுளை விளக்கக் கூறிய கதையால் அறியலாகும். அதற்கு மேல் நிகழ்ந்தவை வருமாறு:-விநதை தன் சிறை நீங்கும் வழி கூறுமாறு கத்துருவை வேண்ட, அவள், "தேவலோகத்திலுள்ள அமுத கலசத்தைக் கொண்டு வந்து கொடுப்பின் நீ சிறை நீங்குவை"என்றாள். பிறகு விநதை காசிப ருஷியால் கருடனை மகனாகப் பெற்று அவனுக்குத் தன் விருப்பை யுணர்த்தினள். அவன் தக்ஷணமே தேவலோகம் சென்று; அதனைக் கொணர்ந்து தன் தாய் கட்டளையிட்டபடியே கத்துருவிடம் சேர்ப்பித்து தன தன்னை சிறை நீக்கினன். பிறகு, கத்துரு அவ் அமுதத்தை நாகங்கட் கூட்ட விரும்பி அவற்றை நீராடி வரும்படி சொல்லி யனுப்பினள். அவை அவ்வாறே வந்த பொழுது அமுத கலசம் உருண்டு கிடந்தது. அமிர்தம் சிந்திக் கிடந்த தருப்பைப் பிரிமனையைப் பாம்புகள் நக்கின. நக்கவே அவற்றின் நாக்குக்கள் இரண்டாகப் பிளவுற்றன" என்பதே. —ம. கோ.

விநோதக் கூற்று.

("காதும் செவியும் இல்லை" என்ற விடையை எதிர்பார்த்து ஒரு)

உபாத்தியாயர்:—பாம்புக்கு எந்த இரண்டும் இல்லை?

ஒருபையன்:—(எல்லோரையும் முந்த ஆவலுடன்) அதுக்கா? மயிரும் சிறகும் இல்லை.

ஜான் மில்டன் என்ற ஆங்கில கவீசுரர் தாம் குருடரான பிறகு அழகுள்ள ஒருத்தியை மணந்தார். அவள் பரம துஷ்டை. மில்டனைப் படாத பாடு படுத்துவளாம். இவ்வுண்மை யறியாநண்பன் ஒருவன், மில்டனைக் காண வந்தபோது அவர் மனைவியையும் கண்டான். உடனே அவளது பேரழகை வியந்து மில்டனை நோக்கி அந்

நண்பன்:— "ஐயா! நீ மிக அதிர்ஷ்டசாலியே. ரோஜாவே உன் மனைவி." என்ன,

மில்டன்:—(பெருமூச் செறிந்து) "ஆ! ஆ! நான் குருடன். ஆதலின் அவளது அழகை அறிந்து மகிழும் ஆற்றல் எனக்கில்லை. ஆயினும் நீ சொல்வது பொய்யே இல்லை. என்மேல் படுகிறதெல்லாம் முட்களே யாதலின் அவள் ரோஜாவே என்பதில் சந்தேகமே இல்லை" என்றார்.

அடியார்க்கு நல்லான்.

நன்மொழி.

(1) தீயோர்.

அற்பனுக்கு அறத்தின் பெருமையும், மலடிக்குப் பிரசவ வேதனையும், காக்கைக்கு அன்னநடையும், கழுதைக்கு இன்னிசையும், வறிஞனுக்கு சுகமும், நாய்க்கு சிங்கத்தின் வலியும் தெரியா. அது போல், தீயோர் நல்லோர் குணங்களை அறியார். நல்லோர் பால் அவர்கள் நயவஞ்சகத்துடன் பணிவொடு நடந்து கொள்வதாக நடித்துக் காட்டினும், என்றேனும் அவர்களது இயல்பு வெளியாய் விடும். பல நூல்களை ஓதி யுணர்வது போல் பாவனை காட்டியும் பலர்க்குப் பணிவிடை புரிந்தும் அவர்களது இயற்கைக்குணம் ஒரு போதும் மாறாது. உபகாரிகளுக்கு அவர்கள் அபகாரமே செய்வர்.

தூம்பினிற் புதைத்த கல்லும் துகளின்றிச் சுடர்கொடாது.
பாம்புணப் பாலே வார்த்துப் பழகினும் விடமே ஈயும்
வேம்பது தேன்வார்த் தாலும் வேப்பிலை கைப்பறாது:
ஆம்பல நூல்கற் றாலும் அல்லவர் நல்லோர் ஆகார்.

தீயோனிடம் தயையின்மை, காரணமின்றியே சண்டை செய்தல், பொறாமை, பிறர் பொருள் நயத்தல், புறங்கூறல், பிறர்பழி கூறல், பொய்பேசல் முதலிய தீக்குணங்கள் குடிகொண் டிருக்கின்றன. இக்குணங்களில் ஏதேனும் ஒன்று இருப்பினும் அவனுக்குப் பெருங்கேடு விளைவது திண்ணம். இவையாவும் ஒருவனிடம் இருந்தால் அவன் என்ன பாடு படான்? அவனை நம்பி யொழுகுவோரது முடிவும் என் ஆகும்? இத் தீக்குணங்கட் கெல்லாம் அற்ப புத்தியே காரணமாகும். ஆரம்பத்திலேயே இவ் வற்பபுத்திக் கிடங் கொடாது ஒவ்வொருவரும் இயன்றவரை முயலவேண்டும். ஏனெனில்;

*மலையின்உச் சியின் மீ துற்றமாப்பெரும்உருளைக் கல்லை
உலைவுறஆரம் பத்தில் உந்திஓர் சேயும் தள்ளும்.
நிலைவலி அரக்கன் றானும் நேர்ந்திடை நிறுத்தொணு(து)இச்
சிலையினைப் போன்ற தேதான் தீமையும் என்பர் மேலோர்.

பருவம் தவறிய பின் அவர்கள் திருந்துவது, பன்றி அறுசுவை உண்டியின் உருசியும், பிறவிக் குருடன் விளக்கொளியும், செவிடன் சங்கீத கானமும் பெற்றுப் பயனுறல் போலாம். நிற்க.

---

*அருங் பொருட்டிராட்டு: முதற்பாகம் (விலை 8 அணு)

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு"

என்பது பொய்யா மொழி. நீரானது அதுசேர்ந்த நிலத்தின் குணத்தைப் பெறுவது போல,இனத்திற் கேற்பவே ஒழுக்கமும் உண்டாகும். ஆதலின் தீயரோடு ஒருபோதும் சேரலாகாது. துர்யோதனன் தனக்குத் துர்ப்போதனை செய்த தீயனாகிய சகுனியின் புன்மொழி கேட்டு, நல்லோர்களாகிய பீஷ்மர், துரோணர், விதுரர் முதலியோரது புத்திமதிகளையும் கேளாது பாண்டவரைப் பகைத்து எய்திய கேடு கொஞ்சமா? இனத்தோடு முன்றோ மடிந்தான்? 'நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்'. உள்ளபடியே தீயோர் சேர்க்கை தன்னறிவையும் மாற்றிச் சேர்ந்தோர்க்கும் கேட்டையே விளைவிக்கும். ஆதலின்

தீயோரைக் காண்பதுவுந் தீதே: திருவற்ற
தீயோர்சொல் கேட்பதுவுந் தீதே:— தீயோர்
குணங்கள் உரைப்பதும் தீதே: அவரோ(டு)
இணங்கி இருப்பதுவும் தீது.

எம். எம். நாராயணஸ்வாமி ஐயர்.
முடிகொண்டான்.

அகச்சான்று அல்லது மனச்சாட்சி.

ஏல்லாம் வல்ல இறைவன தருளால் இவ்வுலகத் தோன்றிய எல்லாவுயிர்களுக்கும் பகுத்தறிவு வாய்க்கப் பெற்றுள்ள காரணத்தினால் "அரிது அரிது" என்று ஆன்றோரால் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது மக்கட் பிறவியே. இப்பிறவி வாய்ந்த ஒவ்வொருவரும் கைக்கொண்டொழுக வேண்டிய கடமைகள் பலவற்றுள்ளும் முதன்மை யானவை, "மெய் பேசுதல்," "பிற வுயிர்களைத் துன்புறுத்தாமை" முதலிய சிலவாம்.

ஒரு மனிதன் பொய் சொல்லவோ, தீவினை புரியவோ தொடங்கும் பொழுது, அவனது உள்ளத்திலிருந்து "இது பிழை. ஆதலின் செய்யற்க!" என்றொரு ஒலி அவன் காதில் விழுந்து அவனை விலக்கு

கின்றது. அம்மனிதனும் அதற்குக் கீழ்ப்படிந்து அடங்கி நடந்து வருகின்றான். அவன் நிலைமையிலுள்ள மற்றொருவனோ யாதொரு தங்கு தடையுமின்றிப் பொய் சொல்லியும் திருட்டுப் புரட்டுகள் செய்தும் வருகின்றான்.

மிகுந்த கல்வி கற்று உயர்தரப் பரீக்ஷைகளிலுந் தேறிய மனிதர் இருவர் ஸ்வயாதிகாரமுள்ள இரண்டு வேலையிலமர்கின்றனர். ஒருவன் லஞ்சம் வாங்கத் தொடங்குகின்றான். மற்றவனோ லஞ்சம் என்றோ, சிப்ராசு என்றோ காதாற் கேட்கவு மாற்றாதவனாய் நடுங்கிச் சீறி விழுகின்றான். இவ் வேற்றுமைகட்குக் காரணம்யாது? இவ்விரு மனிதரிடத்தும், அவரவரது மனச்சாட்சி 'இது செய்யாதே!'' என்று அவர்களைத் தடுக்க வில்லையோ? ஒருவன் மட்டும் அதனைக் கைக்கொள்ளவும், மற்றவன் அதனைக் கைவிடவு மென்ன காரணம்?

மனச்சான்றென்பது எல்லா மனிதர்க்கும் அகத்திற்குச் சான்றாக நிற்கின்றதோர் ஆற்றலாகு மென்றும், இவ்வாற்றல், மனிதன் தீவினை புரியக் கருதும்பொழுது, அவ்வினைத் தடுத்து வருகிற தென்றும், ஆனாற் சிலர் அதின் கட்டளையை மதியாது அதைப் பகைக்கின்றனரென்றும், சிலர் கூறுகின்றனர். இப்படி யவர் மதியா திருப்பதற்குத் தகுந்த பல காரணங்களு முண்டென்று அவர்கள் முடிவு செய்திருக்கின்றனர்.

''சில மனிதரது அவா, வெகுளி, பேராசை, மயக்கம், செருக்கு, பொறாமை முதலிய மனமாறுதல்களுக்கு, அவர்களது மனச்சான்றுக்குள்ளதைவிட அதிகத் திறமை யிருப்பதனால் அம்மனச்சான்றை யவைகள் கீழடக்கி விடுகின்றன. பொருளைத் தேடவேண்டிய தே மேலான விருப்பமாய் உள்ள ஒரு வேலைக்காரன், லஞ்சம் வாங்க முயலும்பொழுது அவனது மனச்சாட்சி ''வாங்காதே! அது பெருங் குற்றமாகும்; அதனால் நீ மிகுந்த துன்பமுற நேரும்!'' என்று கூறுகின்றதெனினும், அவனது விருப்பத்திற்கே மிகுந்த வல்லமை இருக்கின்றபடியால், அவனது மனச்சான்றை அவ் விருப்பம் கீழடக்கி விடுகிறது. விடவே, தானும் அத் தீய விருப்பத்திற்குக் கீழ்ப்படிகின்றான். இளமையிலேயே நன்னெறியிற் பயின்று நல்லோரோ டிணங்கி வந்தால், மனச்சாட்சியைக் கொண்டே அவா,

வெகுளி முதலியவற்றை வென்று, தன் எண்ணங்களைக் கீழடக்க வியலும்" என்றும், இம்மனச்சாட்சியின் வல்லமை, ஏற்றத்தாழ்ச்சிகளுக்குத் தாய் தந்தையரிடத்தினின்று முண்டாகின்ற பழக்க வழக்கமுங் கூடக் காரணமாகின்றதென்றும் கூறுகின்றனர் சிலர்.

ஆயினும், நாம் மற்றொரு உதாரணத்தை ஆராய்வோம். புலாலுண்ணுங் குடியிற்பிறந்த ஒருவனுக்குப் பிறவியிலிருந்தே புலாலின்மீது வெறுப்புத் தோன்றுகின்றது. அவனது மனச்சாட்சி புலாலுண்ண ஒப்பவில்லை. அவனை நோக்கி அது: "நீ யுண்ணாதே" என்று பகர்கின்றது. அவனது தாய் தந்தையர்க்குப் புலாலின்மீது வெறுப்பே தோன்ற இல்லை; மிகுந்த விருப்பத்தோடு அவர்கள் அதனை யுண்கின்றனர். புலால் உணவு கிடைக்கா விட்டால் மற்றெந்த வுணவு மவர்கட்குச் செல்வதில்லை. புலாலுணவை நீக்கிய மகனை "துறவி!" யென்றும், "பார்ப்பானாகி விட்டான்!" என்றும், "அறிவிலி" யென்றும், பழி கூறி ஏளனஞ் செய்கின்றனர். மனச்சாட்சி "புலாலுணவைத் தவிர்." என அவனைத் தடுத்திருந்ததெனில், இப்படிச் செய்யவுங் கூறவும் அவர்க்குத் துணிவே உண்டாயிராது.

"அவர் முதலிலேயே தமது மனச்சாட்சியை வற்புறுத்திக் கீழடக்கியது தான் இதற்குக் காரணம்" எனின், மகனுக்குப் புலாலினிடத்துள்ள வெறுப்பைக் கண்டபொழுதாவது, அவர்க்கு அகச்சான்று நன்கு விளங்க வேண்டியதாகும். அவ்வாறு செய்வதானால், ஒருக்கால் அவரும் உடனே புலாலை விலக்காவிடினும், மகனை இகழ்ந்துரையா திருப்பதற்காவது இடமுண்டு.

இளமையிலிருந்தே தாய் தந்தையர் தம் மகனுக்குப் புலாலுண்ணப் பழக்கியுள்ளார்களென்றும் அதனாலேயே சிறு வயதிலிருந்தே அவர்கள் புலாலை விரும்புகின்றன"ரென்றுஞ் சொல்பவர், இச்சிறுவனது செய்தியை யுற்று நோக்குவாராக. இவனையும், இவன் தாய் தந்தையர் புலாலுண்ணுமாறு இளமையிலிருந்தே பழக்க முயன்றனர். ஆனால் இவன் சிறுவயதிலிருந்தே புலாலை வெறுத்தொதுக்கி விட்டான். ஆகவே, "இத்தாய் தந்தையரது அகச்சான்று, 'புலாலுணவு கூடாது' என்று கூறவில்லை" என்று கொள்வதிற் குற்றமில்லையெனத் தோன்றுகிறது. (இன்னும் வரும்.)

—R. S. கங்காஜடேசசர்மா.

சிறுவர்க்காகும் கதைப்பூங் கொத்து.

(112-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கதை—23.

எப்பொருள் களிலும் கைப்பொரு ளேமேல்.

நாகநாதன் உத்ஸவம் பார்க்க ஒரு ஊருக்குச் சென்றான். செல்லுகையில் பசியாலும், தாகத்தாலும் வருந்தினன். குளங்களில் ஜலமே யில்லை. வெயிலின் உக்கிரகம் சகியாது, அவன் ஒரு மரத்தண்டை சென்று பழமொன்றைக் கண்டு சந்தோஷத்துடன் எடுத்தான். எடுக்கையில், மரத்தினுச்சியில், நன்கு பழுத்த பழமொன்றைக் கண்டான். கண்டதும், கைப்பழம் புளிக்குமென எண்ணி தூரத்தில் எறிந்து விட்டான். பின் நல்ல பழத்தைக் குறி வைத்து, கற்களை எறிந்தான். கற்களெல்லாம் குறி தவறிவிட்டன. வேறு கற்களும் கிடைப்பதரிதாய் விட்டது. ஆகவே, களைப்பு மேலிட்டவனாய் "ஐயோ! நான் என்ன மூடன்! மரப்பழத்தைப் பார்த்துக் கைப்பழத்தை எறிந்தேனே! என் புத்தியைச் சுடவேண்டும்." என்று பரிதவித்துக் கூறிச் சென்றான்.

கதை—24.

பொய்யைத் தள்ளி மெய்யைத் தழுவு.

பாரசீகத்தில் சுநந்தன் என்ற அரசனிருந்தான். அவன் பரமதயாளு. ஒரு நாள் விலங்குடன் சென்ற நால்வரைக் கண்டு "என்ன குற்றத்தினால் நீங்கள் இக் கதிக்குள்ளானீர்கள்?" என வினவினான். ஒருவன், "அபராதியே யல்லாத என்னை, என் விரோதி தன் சாமர்த்தியத்தால் அபராதியென ரூபித்து விட்டான்" என்றும், இரண்டாவன் "எனக்கும் ஒருவனுக்கும் ஆகாது. முன்னாலேயே விவாக விஷயமாய் மனஸ்தாபம். ஆதலால் அவனால் எனக்கிக் கதி நேர்ந்தது." என்றும், "மூன்றாவன் வியவஹார தத்வத்தை யறியாத நியாயாதிபதி என்னை யபராதியெனத் தீர்மானித்து விட்டார்." என்றும் கூறினர். கடைசியாக யதார்த்தவாதியான நான்காவன், "சுவாமி! நான் வியாக்கிரபுரத்தில் ஒரு தனிகனுடைய வீட்டில் பணப்பெட்டி திருடினேன். அதனால் இக்கதி சம்பவித்தது' என்றான். அது கேட்டுச் சந்தோஷமடைந்த சுநந்தன், "இவ்வுத்தமர்களுடன் நீ உறைவதற்குத் தகுதியல்லன்" என வுரைத்து, அவனை விடுவித்தான். அவனும் யோக்கியனாகவே காலம் கழித்தான்.

கதை—25.

அழுக்காறுல் உயிர்க்கு ஆணியும் விளையும்.

பிரம்மாரண்யத்தில் 'காலமழகன்' என்ற சிங்கம் ஒன்றிருந்தது. அது ஒரு நாள் அலைச்சலால், வியாதியுற்று வருந்தியது. ஆகையால் அது தன் பரிவாரங்களைத் தனக்கு வேண்டிய ஊழியஞ் செய்ய அழைத்தது. எல்லா மிருகங்களும் வந்தன. சோமன் என்ற நரிமட்டும் வரவில்லை. கேசரி "ஏன் இந்தச் சோமன் மட்டும் வரவில்லை" என்று பக்கத்திலிருந்த பிராணிகளை வினவியது. நரிபாற் பொறாமைகொண்ட கழுதை ஒன்று, "சுவாமி! இன்று தங்களுக்கு வியாதி என்றறிந்த சோமன் அலக்ஷியமாய்ச் சுற்றித் திரிகிறான்" என்றது. கோளரிக் குண்டான கோபத்திற் களவில்லை. இதை மித்திரர்மூலமாய் அறிந்த நரி, சிங்கத்தின் சமீபம் செல்ல, அது மிகவும் கோபத்துடன், "அடே! அற்ப! என் நீ முன்னமே வரவில்லை?" என்றது. புத்திமானான சோமன் விநயத்துடன் "மிருகேந்திர! தங்க ளாக்ஞையை மீறுவேனோ? தங்களுக்கு வியாதியென அறிந்ததும் எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. உடனே ஔஷதம் தேடச் சென்றேன். தேவரீர் தயவு செய்து மன்னிக்க" என்றது. சிங்கம் சந்தோஷமடைந்து "அது என்ன ஔஷதம்" என்றதும், நரி "தேவ! கழுதை ஈரல் தான் இதற்கு மருந்து. அதைத்தின்றால் இவ்வியாதி தீரும்" என்றது. இவ்வண்ணம் நரி சொல்லி வாய் மூடுமுன், கேசரி, பக்கத்தில் இருந்த கழுதை மேற் பாய்ந்து அதனைக் கொன்று தின்றது.

வி. சு. நடராஜன்.

கோபால கிருஷ்ண கோக்லே

பூபாலர் களும்எனைப் புவியோரும் நனிநாளும் போற்று மாறோர்
'கோப்பால கிருட்டிணகோ குலன்' நம்பா ரதநாட்டில் குடக்குத் திக்கி
லேபாவு சந்திரன்போல் வந்தஉண்மை யினைத்தெரிக்க இப்போதுற்ற
கோபால கிருட்டிணகோ குலன்என்னும் சாபாலர் குலமே லோனே.. 1

[குடக்கு—மேற்கு, சாபாலர்—பிராமணர்.] [முன்

புகழ்சுதரி சனன்சங்கத் தான்கதையான் அறிவாளான் பொருவில் லான்
திகழுமவை இல்லானுய்க் கோபால கிருஷ்ணனெனச் செனித்தான். நீயோ
புகழ்சுதரி சனன்சங்கத் தான்கதையான், அறிவாளன், பொருவில் லானுய்த்
திகழுமவை நனிவிளங்கக் கோபாலகிருஷ்ணனெனச்செனித்திட்டாயே.

[(முதல்) சுதரிசனன்..................(போரு) வில்லான்—பஞ்சாயுதங்களும் தரிக்கும் திருமால், (அறி—பிரத்யக்ஷமாய் அறியக் கூடிய, போரு—போர்க்குரிய) அவை—ஐந்தாயுதங்களும்.

(இரண்டாவது) சுதரிசனன்..................போருவில்லான்—அழகும் வலிமையுமுள்ளான், பலசபைகளுடன் சம்பந்தப்பட்டவன், புகழாளன், அறிவுடையவன், நிகரற்றவன்; அவை நனி விளங்க—கற்றோர் சபை சோபிக்க.]

"பெரியவரைத் துணைக்கொடுமுன் பொதுவரைக்காத் தான்; மானம் பேணிக் காத்தற்
குரியவரைக்கலைபெருகஉதவினன்நல் லார்க்கன்றோன்;உவந்தின்றேனும்
பெரியவரைத் துணைக்கொடுமுன் பொதுவரைக்காத் தான்மானம் பேணிக்காத்தற்
குரியவரைக் கலைபெருக உதவினன்நல் லார்க்"கென்னும் உரைபெற்றாயே

[(முதல்) பெரியவரை..................காத்தான்—பெருமை வாய்ந்த கோவர்த்தன கிரியைத் துணையாகக் கொண்டு முன்பு இடையரைக் காத்தருளினன், மானம்—ஸ்திரீமானம், உரியஅவைக் கலைபெருக—ஏற்ற இடுப்பு வஸ்திரம் வளர, நல்லார்க்கு—ஒருஸ்திரீக்கு: துரௌபதிக்கு.

(இரண்டாவது)பெரியவரைத்துணைக் கொடு—மகாதேவ் கோவிந்த ராநெடே முதலியோரைத் துணையாகக் கொண்டு, பொதுவர் — பொது ஜனங்கள், மானம்—(இந்தியாவின்) பெருமை, உரியவரைக் கலை பெருக—தக்கவரை கல்வி யறிவுமிக, நல்லோர்க்கு—யோக்கியர்க்கு.]

குலத்தாலும் உத்தமநற் குணத்தாலும் ஒளிர்கருணைக் குன்றே! கல்விக்
கலத்தாலும் அறிஞர்களின் கணத்தாலும் கனந்திகழும் கதிரே! வாய்மைப்
பலத்தாலும் தன்னலஅர்ப்பணத்தாலும் பயனுற்றும் பண்பே! வாய்ந்த
வலத்தாலும்பின்னையுமெவ் வண்த்தாலும் வருவலியே!மறைந்ததென்னே.

[கலம்—ஆபரணம், கணம்—கூட்டம்.]

இந்தியநாட் டரசிறையா ராய்ச்சியினில் வாச்சராவாய், இராச நீக
தந்திரமா தியவற்றில் ராநடேயாய், கல்வியில்பந் தார்க்கார் ஆகிச்
சந்ததமும் தாயகத்தன் பால்,ஓயா முயற்சியினால் தாதாபாயாய்
விந்தைதரு சிந்தைதிட வலிமையினால் மேடாவாய் விளங்கி நின்றாய்

[வாச்சா—டின்ஷா எடில்ஜீ வாச்சா; ராநடே—மகரிஷி மகாதேவ கோவிந்தராநடே,பந்தார்க்கார்-ராமகிருஷ்ண பந்தார்க்கார்;தாதாபாய்—மாப்பெருங் கிழவரான தாதாய் 'நௌரோஜி, மேதா—பிரோஸ்ஷா மாஞ்சர்ஜி மேடா.]

உத்தமபா ரதஅன்னைக் கைம்புலனு யெஇன்றோர்க் குயிர்போன் றான்நீ
இத்தகையோர் யாவரினும் புத்திமிகு நீயேதான் இளைஞன்;இன்னும் [தேர்
எத்தனையோ காலம்இருந் தெமக்குநலம் இயற்றுவைஎன் றிருந்தோம் அந்
எத்திசையும் சித்தநலி வுற்றிடஎங் குற்றனை நீ இசைத்திடாயே.

‘உடுக்கையிழந் தவன்கைபோல் இடுக்கணொழிப் பதுநட்பென் றுணர்ந்
[தோய்! நோயால்
கிடக்கையிலும் மருத்துவர்கள் தடுக்கையிலும் அவர் மொழியைக்
கேளா தேநீ
படுக்கையிலும் இருக்கையிலும் எழுகையிலும் நிற்கையிலும் பரிவி னோடு
நடக்கையிலும் நலமேநீ நவிலுற்ற நம்மவர்க்கு. நாடினையே 7

தருமநெறி தவறாதே வறுமையிற்செம் மையில்வாழும் தனிப்பே றுற்றாய்
பெருமையுறப் பதினெட்டாம் வயதுதனிற் பலர்புகழப் பீ. ஏ. ஆனாய்!
இருபதினில் போதனைசால் நல்லாசான் எனச்சிறந்தாய்! இருபத்தோன்றில்
பரிவொடுபத் திரிகைஒளி பரப்பிமன இருளகற்றும் பண்பு வாய்ந்தாய்

ஆண்டிருபத் தைந்தினில்‘பம் பாய்மாகா ணக்கூட்டம், அணிபெற் றோங்க
வேண்டியதன் கௌரவகா ரியதரிசி யெனவாக வேண்டப் பெற்றாய்.
மீண்டுமிரு பத்தொன்ப தாம்வயதில் எல்லவரும் விரும்ப யாரும்
காண்டகு‘காங் கிரஸ்கார்ய தரிசி’ என விளங்குமொரு கனமுற்றாயே. 9

முப்பத்தோ ராம்வயதில் ‘ராயல்கமி ஷன்’ சபைக்கு முன்னே மெய்யோர்
ஒப்பச்சாட் சியம்தந்தாய். முப்பத்து நான்கதனில் உயர்ந்தோர் யாரும்
செப்பப்பம் பாய்ச்சட்ட சபைமெம்ப ராகிநலம் செய்தாய்! மற்றும்
முப்பத்தா றினில்‘இம்பீ ரியல்சட்ட சபை’ சேர்ந்து மொய்ம்புற் றாயே.! 10

சாற்றரிய தேற்றமுளாய்! புவிநீத்துக் கதுமெனவிண் சாரு மட்டும்
மாற்றலரும் போற்றிடுநல் லாற்றலொடும் அந்நிலையை வகித்திட்டாயே!
நாற்பதினில் ‘‘இந்தியர்சே வகசங்க’’ மெனும் சபையை நாட்டி மற்றும்
ஏற்றமிகு ‘இந்தியன்ஸர் விஸ்கமிஷ’ னரில் ஒருவன் எனஆ னாயே. 11

நம்மாநி லத்திகழ் ‘இந்தியசே வகசபை’யை நாட்டி னாய்நீ
சும்மாதென் ஆபிரிகா வினில் நம்சோ தரர்எய்தும் துயரம் தீர்த்தாய்
அம்மாநிற் கெம்மாவி உடல் பொருளென் றிவையாவும் அளித்திட்டாலும்
கைம்மாறா மோஅறியோம்: கைம்மாறு வேண்டாத கடமையோனே!. 12

‘ஈன்றஇவன் தந்தைஎன் னோற்றான்கொ’லெனஎல்லவரும்இரும்பூதெய்தித்
‘தோன்றிடில்நற் புகழோடுந் தோன்றுகமற் றிவன் போல்’ இத்தோமில்
ஆயோன்
போன் ‘றென்பும் உரியர்பிறர்க்’ கெனா புகல்வீர்’என்றிடஇப் புவியில்வந்த
வான்றிறலாய்! கோபால கிருட்டிணகோ குலனென்னும் மகிமை மாலே.

அரசர்பிரான் ஐந்தாம்ஜார்ஜ் அகமகிழ்வுற் றுக் கே,ஸி, ஐ,இ,என்னும்
பர்சுபத வியைத்தர‘‘அப் பட்டமெதும்யான் வேண்டேன். பாரில் எற்குப்
பிரசைகளில் ஒருவனெனப் பிறங்குவதே பெருமை’’யெனப் பேசினையே
இரசமிகு மொழிஇதுபோல் இனியாதே? இனியாதே எதும் மன்னே 14

[இனியாதே—இனிஎன்ன இருக்கிறது?. இனியாதே—ஐயோ! இனி
மை தராதே!]

'உயிர்போருங் காலையில்தன் மகன்மடியில்சாய்ந்திறந்தல்உறுதி'யென்னும்
இயலார,.'இந்தியசேவகர்சங்க'ச் சேய்மடியில் இறந்தாய் சொல்லோ?
அயலாரும் உறவினரும் ஊராரும் பகைஞர்களும் ஆக்கம் எய்தச்
செயலாலும் வாக்காலும் மொழியாலும் தேசநலம் செய்மே லோனே! 15
(இயல் ஆர-தன்மைக்கேற்ப)

இலகும்இரு வேலிபுலர் வுறினும், மகிழ், சண்பகம்என்றிவற்றைப் போன்ற
மலர்கள்சில மறைவுறினும், மணமுயிர்க்கும்; மற்றிதனை மான, நின்றன்
அலகில்புகழ் உறுபுனித மனதுமொழி உடலிவைசெய் அரிய செய்கை,
உலகில்அனு தினமும் ஒளிர் வுறுமால்எவ் உருநாட்டும் உனக்கு வேண்டா.

(இலகும்-விளங்குகின்ற, இருவேலி-வெட்டிவேர், புலர்வுறினும்-வாடினும்,மகிழ்-மகிழம்பூ, மணம் உயிர்க்கும்-பரிமளம் வீசும், இதனை மான்-இதுபோல், உருநாட்டு-சிலைமுதலியன நாட்டுதல்.)

'தனயனிலும் சதமடங்கு தகையை'எனத் தகுமொழிக்கோர் சான்றாய் வந்து
தினையளவா யினும்பிறர்பால் 'கொளல்தீ'தென் றறிந்து, மனத் திண்மை
மனமகிழ்வுற் றெல்லவரும் தமக்களித்தமாநிதியை மறுத்தநின்றன் [யோடு
இனிய புதல் வியர்முதலோர் இவ்வுலகில் என்றென்றும் இலகி வாழி! 17

தன்னுயிர்போல் மன்னுயிர்கள் தமைத்தாங்கும் தக்கோய்! நீ தாபித்தென்
நின்னுயிர்போல் நனிவளர்க்கும் 'இந்தியசேவகர்சங்கம்' நீடு வாழி! [றும்
துன்னிஅதன் இறைமைவகித் திடும்ஸ்ரீநிவாசன்எனும் தூயோன் வாழி!
மன்னியமெய் இசைபரப்பி வளமிகுந்து பாரதநம் மாதா வாழி! 18

[முன்னையவன்'ஆம்பலிடர் முற்றொழித்தான்தன்னுடைய மொய்ம்காட்டி.
பின்னையும்,யாவருமகிழ எழுவிடைகள் இறுத்தான்.அப் பெற்றி தோன்ற
முன்னைய! நீ ஆம்பலிடர் முற்றொழித்தாய் நின்னுடைய மொய்ம்பு காட்டி.
பின்னையும்,யா வருமகிழ எழுவிடைகள் இறுத்துமிகப் பேறுற்றாயே 3(எ)]

(முன்னையவன்-முன்பிருந்த கோபாலகிருஷ்ண கோகுலன், யானையின் துன்பத்தை:(சாபத்தால் கஜேந்திரனான இந்திரத்துய்மனனது துன்பத்தை), மொய்ம்பு-வலிமை,பின்னை-(நப்பின்னைப் பிராட்டியாகிய உருக்குமணிதேவி, எழுவிடைகள்-எழு காளைகள், இறுத்தான்-வலி அடக்கினான், பெற்றி-தன்மை, முன்னைய, நீ-முன் ஐய! நீ, ஆம்பல் இடர்-(மன்பதைகட்கு) உண்டான பலவகைத்துன்பமும், பின்னையும்-மற்றும், எழு விடைகள்-(சட்டநிரூபணசபை, வைஸ்ராய சபை முதலியவற்றில் கேட்ட கேள்விகளுக்கு ஏற்ற விடைகள், இறுத்து-கூறி)

☞இச்செய்யுள் 4வது செய்யுளாக இருந்திருக்க வேண்டியது. ஆதலின் (3.எ) கொடுத்துக் கடைசியில் சேர்க்கப்பட்டுளது. படிக்கும்போது அதனை மூன்றாவது செய்யுட்கு அடுத்த செய்யுளாகச் சேர்த்து வாசிக்க.]

ம. கோபாலகிருஷ்ணையர்.

சமாசாரக் கொத்து.

திண்டுக்கல் பால்ய முஸ்லீம் சங்கத்தின் முதல் ஆண்டு நிறைவுக்கொண்டாட்டம் ஆனரபிள் திவான்பகதூர் ஜஸ்டிஸ் டி. சதாசிவையரின் அக்ராசனத்தின்கீழ் மே௴ 31௳ கொண்டாடப்பட்டது. அச்சமயம் திண்டுக்கல் தமிழ்ச்சங்கக் காரியதரிசியும் தாலூகா போர்ட் வைஸ்பிரஸிடெண்டுமான ஸ்ரீ பி. பொன்னுசாமி நாயுடுகாரு "தமிழ்ப் பெருமை"யையும், மதுரை வியாபாரி ஜனாப் ஹாஜி ஸையது ஷம்சுதீன் சாஹிப் "வட இந்திய முஸ்லீம்களை விடத் தென்னிந்திய முஸ்லீம்கள் நாகரீகம், கல்வி, தொழில் இவற்றில் தாழ்ந்திருக்கக் காரணம் யாவை?"-என்பதையும், மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையர், "கற்றுழித்தொழுக"லையும், திண்டுக்கல் முனிசிபல் ஹைஸ்கூல் பண்டிதர் ஸ்ரீ கே. வீராசாமி பிள்ளை "இளைஞர் கடமை"யையும் பற்றிப் பிரசங்கித்தனர்.

ஜூன்௴ 4, 5௳களில் நாட்டரசன்கோட்டை ஸ்ரீ வித்தியா பரிபாலன சங்க ஸ்தாபனக் கொண்டாட்டம், அவ்வூரில் மகிபாலன் பட்டி வித்வான் ஸ்ரீ மு. கதிரேசன் செட்டியாரது அக்ராஸநத்தின் கீழ் நடைபெற்றது. அறிஞர் பலர், பல அரிய விஷயங்களைப்பற்றி உபந்யசித்தனர்.

புதுவயல் ஞானப்பிரகாச சபையின் இரண்டாவது வருடபூர்த்தி மகோத்ஸவம் ஆண்டிப்பட்டி ஜமீந்தார் ஸ்ரீ எம். வி. டி. பெத்தாச்சி செட்டியார் எம். ஆர். ஏ. எஸ். அவர்களின் அக்ராஸநத்தின் கீழ் ஜூலை௴ 2, 3௳களில் நடைபெறும். கல்வி கேள்விகளிற் சிறந்த ஸ்திரீ புருஷர்கள் பலர் உபந்யஸிப்பார்கள். விவரம் இனி அறிவிப்போம்.

தூற்றுக்குடி ஸத்ஜன ஸபையின் 2-வது வருடபூர்த்தி மகோத்ஸவம் இம்மாதம் 30௳ ஜூன்௴ 1, 2௳களில் ஸ்ரீமத் சுப்பையா சுவாமிகளின் அக்ராஸநத்தின் கீழ் நடைபெறும்.

தபாலாபீசு அறிவிப்பு:–1–2–17 முதல் பல்லாரியைச் சேர்ந்த 'பல்லாரி கலெக்டரேட்' ஒரு ஸப் ஆபீசாக்கப் பட்டிருக்கிறதென்றும், பிராஞ்ச் ஆபீசாக இருந்து திருவனந்தபுரத்தைச் சேர்ந்திருந்த 'கீழவைப்பூர்' தபாலாபீசு மூடப்பட்டு விட்டதென்றும், முன்பு பிராஞ்சாபீசுகளாக இருந்த (தஞ்சாவூரைச் சேர்ந்த) 'அம்மாபேட்டை'ப் போஸ்டாபீசும், மலபாரைச்சேர்ந்த 'கல்பதி–பாலக்காட்டு' போஸ்டாபீசும் முறையே தம்பையின்ட் ஸப் ஆபீசும், ஸப் ஆபீசுமாக மாற்றப்பட்டுளதென்றும் நமக்கு அனுப்பியுள்ள தபால் இலாகா அறிக்கையால் தெரிகிறது.

மதுரைத் தமிழ்ச்சங்க விஷயங்கள்.

செந்தமிழ்:–வெளியாகவேண்டிய இதன் சஞ்சிகைகள் அதிவிரைவில் வெளிவந்தமைகண்டு மிக மகிழ்கின்றோம். இங்ஙனம் செய்யுமாறு கண்டிப்பாகக் கட்டளையிட்ட ஆனரபிள் ராமநாதபுரம் ராஜா அவர்கள் சங்க சம்பந்தமான பிற விஷயங்களையும் கவனித்துப் புகழுறுவாராக.

(2) விசனகரமான மரணம்:—தமிழ்ச்சங்கக் கலாசாலையிற்பயின்று வந்த அதி புத்திசாலியான 'வேங்கடநாதன்' என்ற மாணவச் சிறுவன் திடீரென மறைந்தனன். சின்னாட்களுக்குமுன் அவன்து பிரேதம் திருவாவடு துறை மடக்கிணற்றில் மிதந்தது. அங்குதான் அவன் தினம் குளிப்பது வழக்கம். வழுக்கி விழுந்தான் போலும்! பாவம்!.

(3) ராஜிநாமா செய்து விட்டார்:—மதுரைத் தமிழ்ச்சங்கக் கலா சாலையிற் பயிலும் மாணவர்களால் பெரிதும் போன்புடன் நன்கு மதிக்கப் பெற்ற 'கந்தசாமியார்' என்னும் ஆசிரியர், திடீரென்று சில மாதங்கட்கு முன் 'செந்தமிழ்' வேலை பார்த்து வருமாறு நியமிக்கப்பட்டார். ஆயினும் அவர்க்குற்ற கண்ணோயால் அது தம்மாற் செய்ய முடியவில்லை யென்று எவ்வளவு வணக்கமாக எத்துணைப்பேருக்கு மனுச்செய்து கொள்ள வேண் டுமோ அவ்வளவும் செய்து தம்மைப் பழையவேலைக்கு மாற்றி விடுமாறு கேட்டுக்கொண்டார். அவர் கூறுவதன் உண்மையைச் சோதிக்க 'டாக்டர் ஸர்டிபிகேட்' வேண்டப்பட்டது. சாமியாரும் அஃதொன்று பொருள் செலவிட்டு வாங்கி அனுப்பினார். ஆயினும் அவர்க்கு விமோசனம் கிடைக் கவில்லை. இப்பொழுது அவர் தம்வேலையை இராஜிநாமா செய்து விட்ட தாக அறிந்து விசனிக்கிறோம். கலாசாலையிலுள்ள உபாத்தியாயர் யாவரி னும் இவரிடத்துத்தான் மாணவர்கட்கு மிக்கபிரீதி என்பதை நாம் நன்க றிவோம்.

மதுரைத் தமிழ்ச்சங்க உதவிக்காரிய தரிசிக்கும் நமக்கும் நடந்தவிவாதம்

உ-கா.—மிஸ்டர் கோபாலகிருஷ்ணையர்! இங்கே வாருங்கள்.

நாம்:—ஏன்?

உ-கா.—இவ்வாறு நீர் எழுதி வருகிறீர். பெருஞ் சங்கடத்திற்குள்ளாகா திருக்குமாறு உம்மை எச்சரிக்கிறேன்.

நாம்:—என்ன விசேஷம்?

உ-கா—நான்கூடப் பத்திரிகை பார்ப்பதில்லை, சமாசாரங்களை விசேஷமாய்ப் படிப்பதுமில்லை. ஆயினும் தெரிய நேர்ந்தது.

நாம்.—இருக்கட்டும். விஷயம் என்ன?

உ-கா.—ஒருவர் காண்பித்தார் நீங்கள் சங்கத்தைப்பற்றி எழுதியிருந்ததை.

நாம்.—என்ன காண்பித்தார்?

உ-கா.—காகிதமும் பேனாவும் பத்திரிகையும் இருந்தால் கண்டபடி எழுதி விடுகிறதா?

நாம்.—கண்டபடி என்ன எழுதியிருக்கிறேன்? தயை செய்து சொல்லும். தவறு இருக்குமாயின் மறுப்பெழுதும். என்பத்திரிகையிலேயே மன்னிப்பும் அறிவிக்கிறேன்.

உ-கா.—நீர் என்ன தான் எழுதினாலும் உம்மையார் லக்ஷியம் செய்யப் போகிறார்கள்?

நாம்.—லக்ஷியம் செய்கிறவர்கள் செய்யட்டும். என்னை லக்ஷியம் செய்யா தாரைநான் மட்டும் லக்ஷியம்செய்வேன் என்று நினைத்தீர் போலும்?

உ-கா.—உமக்கு இது அழகில்லை. உம்மைப்புழு மாத்திரமாகத்தான் நாங்கள் நினைக்கிறோம்.

நாம்.—அங்ஙனம் என்னை நினைப்பவர்களை நான் மலப் புழுவிற்கும் மயிர்க் கிருமிக்கும் கேவலமாக நினைத்துவிட்டுப் போகிறேன். இதனால் எனக்கென்ன நஷ்டம்?

உ-கா.—நீர்யார் சங்கக் குறைகளை எழுத? சங்க நிலையெல்லாம் அறிந்து விட்டவர் மாதிரிப் பேசுகிறீர்.

நாம்.—நீர்யார் என்னைக் கேட்க? ஆயினும் கேட்டீரே சொல்லுகிறேன். நானு? முதலாவது, நான் சங்கத்தின் 'நன்மை நாடி' எனக் கொள்ளுமே.

உ-கா.—இப்படி எல்லாம் நீர் எழுத எழுத உம்மால் சங்கத்திற்குத் தீமை யே யின்றி நன்மையில்லை.

நாம்.—நான் அப்படி நினைக்கவில்லை. என்றால் சங்கத்திற்கு நன்மையென் றே எண்ணுகிறேனு. உமக்குத் தீமையென்று தோன்றுகிறது போனும் அது என் குற்றமில்லை. என்றால் தீமையே இல்லை. எல்லாம் நன்மையே.

உ-கா.—என் நீர் பத்திரிகையில் எழுத வேண்டும்? எங்களுக்கு அறிவித் திருக்கக் கூடாதா?

நாம்.—உங்களுக்குத் தெரியாத விஷயமாக இருந்தால் அன்றோ நான் உங் களுக்கு அறிவிக்க வேண்டும்? இருக்கட்டும். ஒன்று சொல்லு கிறேன். கேளும்: முன்பு இரண்டொரு முறை சங்கக்குறைகளை உங்களிற் சிலர்க்கு எழுதியும் நேரிற் சொல்லியும் தெரிவித்தேன். அறிவித்த என்னை அவர்கள் சாட்டிக் கொடுத்தனரேயன்றி வேறு பயன் ஏதும் நான் காணவில்லை. நான் என் அநுபவத்தில் ஒன்று கண்டேன். அதாவது எழுதாதிருப்பதால் எப்பயனும் காண முடி யாதென்பதே. ஆனால் "இதுகாறும் எழுதி எப்பயன் கண்டீர்?" என்று கேட்பீரே. சொல்லுகிறேன் கேளும்: ஸ்ரீ பாண்டித்துரைத் தேவர் காலத்தில் எனது நன்முயற்சியும் பத்திரிகா விஷயங்களு மே பெருத்த நன்மை விளைத்தன. அவை விளைத்த நன்மைபோல் ஏதும் விளைத்ததாகத் தெரியவில்லை. அவ்வநுபவத்தைக் கொண்டு, ஏதோ நன்மை செய்யலாமென்றே ஒரே நல்லெண்ணத்துடன் என் கடமைகளைச்செய்து வருகிறேன். வந்தேன். இனியும் வருவேன். உங்கள் உருட்டுப் புரட்டு என்னை ஏதும் செய்ய முடியாது. செய் தாலும் அதற்கெலாம் அஞ்சேன்.

உ-கா.—பாண்டித்துரைத் தேவர் நீர் சொல்லியபடி நடந்திருக்கலாம். அவர் உமக்கஞ்சி ஏதோ சங்கசம்பந்தமாகச் செய்திருக்கலாம். இப்பொழுது உம்மால் ஏதும் செய்யமுடியாது.

நாம்.—அதாவது சங்க நன்மை இப்பொழுது கவனிக்கப்படமாட்டாது என்கிறீராக்கும்? அப்படித்தானே? சங்கத்திற்கு நல்லபெருமை வைக்கிறீர் ஐயா. அப்படியாயின் வீண்பணம்செலவழித்துமுடியாத காரியங்களை நடத்திவருவதாகஎன் நாம்பாவனை செய்யவேண்டும்?

உ-கா.—சங்கப் பெருமை சிறுமைகளைப் பற்றிப் பேச நீர்யார்? பிரமாதமா கச் சங்கத்திற்குச் சாதித்து விடுகிறவர் மாதிரி பேசுகிறீர். சங்கப் பொருள் வருவாய் நிலையறியாமற் பேசுவதிற் பயனென்ன?

நாம்.—"நீர் யார்?" என்றதற்கு முன்னமேயே பதில் சொல்லிவிட்டேனே.

அதுபோதாவிடிற் சொல்லுகிறேன். கேளும். பத்திராதிபராகநினைத்துக்கொள்ளும். இன்னும்வேண்டுமா? "என்னசாதித்து விட்டீர்?" என்று கேட்கிறீர். அதற்கும் பதில் சொல்லுகிறேன். நான் சங்க சம்பந்தமாகச் சாதித்து வரும் பிறவிஷயங்கள் ஒருபாலிருக்க. நீர்நன்கறியக்கூடிய ஒன்று சொல்லுகிறேன். என்போன்று வருஷம் ஆறுரூபாயாவது கொடுப்பவர் இருத்தலாற்றான் உம்போன்ற மாதம் 100ரூபாய்பெறும் காரியதரிசி இருக்கமுடியும் என்பதை நினையும். நிற்க. சங்கம் பொருள்வருவாயின்றி இருப்பது உண்மையே. அப்பொழுதுஎன்ன செய்ய வேண்டியது? வரவுக்கேற்றசெலவே செய்ய வேண்டும். இல்லாவிடில் சங்கத்தை மூடிவிடுங்கள். நஷ்டத்திற்கேன் சங்கத்தை நடத்த வேண்டும்? மூடிவிட்டால் இந்தக்கேள்வியும் விவாதமும் இராதே. நான் சொல்லுகிறேன் என்று ஆயாஸப் படுவதிற் பயனென்ன? சங்கம் அடையும் நஷ்டத்திற்குச் சங்கம் பாத்தியப் படுமேயன்றி வேறு யாராவது பாத்தியப்பட உடன்படுவார்களா?

உ-கா—சங்கத்தைமூடச்சொல்ல நீர் யார்?

நாம்.—நான் மூடுமாறு வற்புறுத்தவந்தவன் அல்லன். அதனைப்பலப்படுத்தி நிலை நிற்கச்செய்யப் பாடுபடுபவனே. நீர் குறிப்பிடுகிறபடி விமோசனமில்லாவிடில் வரவுக்கேற்ற செலவு செய்யவேண்டும். இல்லாவிடில்சங்கத்தை மூடி விடவேண்டித் தன்னாலே நேரும். முக்கியமானது கலாசாலை. அதனைப்பலப்படுத்தியபின் மற்றசெலவுகளைக் கவனித்தால் நன்றாயிருக்கும் என்றுதான் சொல்ல வந்தேன்.

உ-கா.—சரி. உம்மோடு என் வீண் தர்க்கம்? உம்மால் ஆனதைப் பார்த்துக் கொள்ளும்—போதும் அதிக வார்த்தை வேண்டாம்.

நாம்.—உம்மோடு நான் தர்க்கத்திற்கு வரவில்லை. நீரோ அழைத்தீர். ஏதோ சொன்னீர்—பதிலுரைத்தேன். 'போதும்' என்றால் நிறுத்தி விடுவோம். மேலும் பேசினால் பேசத்தயார். நான் சொல்லியதில் தவறிருந்தால் மன்னிக்க. உங்களிடம் தவறிருந்தால் திருத்திக் கொள்க.

உ-கா.—சரி. சரி. போதும் நிறுத்திவிடுவோம்.

நாம்.—இவ்விவாதம் ம. கோபாலகிருஷ்ணையருக்கும் அவரது ஆப்த நண்பராகிய மிஸ்டர் என். வி. சுந்தரராஜையருக்குமாக இருப்பின் இத்துடன் ஒழிக. விவேகோதயம் பத்திராதிபர்க்கும், மதுரைத் தமிழ்ச்சங்க உதவிக்காரியதரிசிக்குமாயின், பத்திரிகையில் வெளிவரும். அத்துடனும் நில்லாது. நம்விவாதமும் இதுபோன்ற பிற குறைகளும் திருநெல்வேலியில் நடக்கும் மதுரைத்தமிழ்ச் சங்க வருடாந்தக் கூட்டத்திலும் ஒருவகைத் தீர்மானத்திற்கு வரவேண்டி வந்தாலும் வரும்.

உ-கா.—நான்தான் சொல்லிவிட்டேன். உங்களிஷ்டப்படி செய்துகொள்க.

நாம்.—நல்லது வருகிறேன்.

அன்பர்களே! விவாத விவரம் அறிந்தீர்கள். நமது உதவிக்காரியதரிசி அவர்கள் கருதுகிறபடி, நாம், "சங்கடத்திற்குள்ளாகும்படி" செய்த 'பிழைகள்' இன்னவென உங்களிற் பலர் ஆவல் கொண்டிருக்கலாம். அவற்றைக்குறிக்க இச்சஞ்சிகையில் இடமில்லை. ஆதலின் மறுசஞ்சிகையில் அவற்றைக் கூறுவம். மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் இம்மாதம் நிகழ்ந்த மற்றொரு விநோதக் காட்சியையும் அடுத்த சஞ்சிகையில் வரைவாம்.

பத்திராதிபர்.

புத்தக மதிப்புரை.

சுபத்திரா பரிணய நாடகம்:—இது அரிகேசநல்லூர் ஸ்ரீமத் முத்து சுப்பப் பாரதி அவர்கள் இயற்றி, ஆண்டிப்பட்டி ஜமீந்தார் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார் எம். ஆர். ஏ. எஸ்க்கு அர்ப்பணஞ் செய்துள்ள ஓர் நாடக நூலாகும். சுபத்திரையைத் துரியோதனனுக்கே மணஞ்செய்து தர பலராமன் தீர்மானிப்பதும், ஸ்ரீகிருஷ்ணனுக்கு அவளை முன்னைய ஏற்பாட்டின்படியே அர்ச்சுனனுக்கே மணஞ் செய்துவைக்க மனமிருந்தும் தமையன் கோபத்திற்கஞ்சி அவனது கருத்துக்கிசைந்தவன்போல் நடிப்பதும், உண்மையறியாப் பேதையாகிய சுபத்திரை துரியோதனனை மணக்க மனமின்றி வருந்துவதும், நாரதன் மூலம் தனக்கு நிச்சயிக்கப்பட்டிருந்த சுபத்திரை துர்யோதனனுக்குக் கொடுபடப்போகிறாள் என்று அறிந்த அருச்சுனன் படும்பாடும் அழகாகக் கூறப்பட்டுள்ளன. சந்யாஸி வேடம் பூண்ட அர்ச்சுனனைத் துவாரகைக்குப் பலராமன் பயபக்தியுடன் அழைத்து வந்து அவனுடன் சம்பாஷித்துச் சுபத்திரையை அவனுக்கு சுசிருஷை செய்ய விடுப்பதும், அவன் அவளைக் கிரஹித்து வெளியேறுவதும் பிறவிஷயங்களும் வேடிக்கையாகவே இருக்கின்றன. இந்நூல் கடின பதங்களின்றி எவர்க்கும் பொருள் விளங்கும் விதமாயும் எளிய செய்யுட்கள் பெற்றும் திகழ்கின்றது. இதன் அருமையை முற்றும் படித்தறிந்து யாவரும் மகிழ்வார்களாக. விலை ரூ. 1—8—0. வேண்டுவோர் எம். ஹரிஹரையர் கீழக்கிராமம், அரிகேசநல்லூர், வீரவநல்லூர் போஸ்ட் என்ற விலாஸத்துக்கு எழுதுக.

பாவநாசம் என்னும் சிங்கைப் பிரபந்தத் திரட்டு:—இது பாவநாசத் தல புராணம் இயற்றிய முக்களாலிங்க முனிவர் புதல்வரும், ஆனந்தக்கூத்தரின் இளைய சகோதரரும், திராவிடமா பாடிய கர்த்தரான மாதவச் சிவஞான யோகிகளின் சிறிய தந்தையுமான நமச்சிவாயக் கவிராயரவர்கள் இயற்றியது. ஷை கவிராயரவர்கள் சிங்கை உலகம்மைமீது பாடிய, கலித்துறையந்தாதி, பதிற்றுப்பத்தந்தாதி, கொச்சகக்கலிப்பா, சந்தவிருத்தம், பிள்ளைத்தமிழ் முதலியனவும், சிங்கைச்சிலேடைவெண்பாவும் அடங்கியுள்ளன. பாடல்கள் பலவும் மதுரம் பழுத்துத் தேன் துளிக்கும் வளச்செம்பாகத்துடன் அமைக்கப்பட்டவை. இந்நூலில் நோய்த்துயர், மிடித்துயர், பிறப்பிறப்புத்துயர், எமதண்டனை முதலிய பலவிஷயங்கள் மிகவும் உருக்கத்துடன் இனிய சொற்களால் தொடுக்கப் பெற்றுள்ளன. இவ்வரிய திரட்டை முதலில் வெளிபபடுத்தியவர் கல்வித்திறமையும், ஆற்றல் மிகுதியுமுள்ள எமது நண்பர் ஸ்ரீமத் மு. ரா. கந்தசாமிக்கவிராயர் அவர்களே. பிணிவாய்ப் பட்டு வருந்தும் இவர் முற்றும் குணமுற்று தமிழுலகுக்கு மிகவும் நன்மை புரிய ஈசன் அருள் புரிவாராக. விலை அணா 12. வேண்டுவோர் ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களுக்கு எழுதிப்பெறுக.

ஸத்திய ஹரிச்சந்திரன்:—கல்வியைப் பரவச்செய்யும் நன்னோக்கத்துடன் பலநூல்களை இயற்றிவருகின்ற நண்பர் முடிகொண்டான் ஸ்ரீ பண்டித எம். எம். நாராயணசாமி ஐயர் இயற்றியுள்ள இப் புதியதமிழ் நாடகத்தினை ஆதியோடந்தம் படித்துப்பார்த்தோம். இஃது இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றுளது. நூலாசிரியர் தெய்வபக்தி, பார்யாதருமம், புருஷ பார்யரின்கடமை, விருந்தோம்பல், ஸத்தியத்தைக் காப்பாற்றுதல், பரோபகாரம், பொறுமை முதலிய அரிய விஷயங்களை நன்கு விளக்கியிருக்கிறார். இடையிடையே காணப்படும் செந்தமிழ்ப் பாக்கள் அவர்க்குத் தமிழிலுள்ள சாகித்திய சக்தியைப் புலப்படுத்துகின்றன. நாடகமுறை அறிந்து படிக்க விரும்புவோர்க்கு இது ஒரு நல்ல புத்தகமென எண்ணுகிறோம். இதன் விலை அணா 6.

—பத்திராதிபர்.